ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

03.07.2013 - மலர் 10, இதழ் 18

# சுப்பர் மேனுக்கு வயது 75





## ராட்சத பெண்குயினின் எச்சம் கண்டுபிடிப்பு

விலை
ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருகோணமலை லெப்டினன் கேர்ணல் ஹார்டிமென் வன்னிமீது பண்டாரவன்னியனின் படைகள் தாக்க முற்பட்டால், அவனது படைகளை அழிக்கும் வல்லமை கொண்ட படைகளை உடன் அனுப்பி வைப்பதாக கலெக்டர் ரேணருக்கு அறிவித்தான். எனினும், யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்ட படையினரால் வெடிவைத்தகல், வவுனியா ஆகிய எல்லைப் பிரிவுகளில் இருந்த படைப்பிரிவுகள் இரட்டிப்பாக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சார்ஜனும், பன்னிரெண்டு வீரர்களும் நிறுத்தப்பட்டனர். ஆங்கிலேய வன்னிக் கலெக்டர் ரேணர் எதிர்பார்த்தது போல பண்டாரவன்னியனும் வன்னியிலிருக்கும் ஆங்கிலப் படைகள்மீது போர் தொடுக்க ஆயத்தமாக இருந்தான்.

எனினும், பெரும்படைகளையும் நவீன போராயுதங்களையும் கொண்டிருக்கும் ஆங்கிலேயப் படைகளைத் தாக்க பண்டாரவன்னியனிடம் மிகக் குறைவான படைவீரர்களே இருந்தனர். அவர்கள் ஆங்கிலேயர்கள்மீது எவ்வாறு தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டுமென்பதை பண்டாரவன்னியன் மிக நன்றாகவே அறிந்திருந்தான். இதேவேளை, பண்டாரவன்னியன் எப்பொழுதும் தம்மீது தாக்குதலை மேற்கொள்ள வரலாம் என்பதை ஆங்கிலேயரும் அறிந்திருந்தனர். பண்டாரவன்னியன் பெரும் எடுப்பிலேயே போரினை மேற்கொள்வான் என்பதே அவர்களின் ஊகமாகவும் இருந்தது.


1810 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் மாமடு, பிரப்பமடு, களுக்கொண்டான்மடு ஆகிய பகுதிகளை இலக்கு வைத்து அங்கிருந்த ஆங்கிலேயப் படைகள்மீது பெருந்தாக்குதலை மேற்கொண்டான் பண்டாரவன்னியன். எதிர்பாராத இத்தாக்குதலால் பல ஆங்கிலே யப் படைகள் கொல்லப்பட்டன. இந்த யுத்தத்தில் நவீன போர்க் கருவிகளை பயன்படுத்த அவர் களால் முடியாமல்போனது. அதனாலேயே அவர்களுக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. இதேவேளை, வன்னியின் தலைவர்களாக இருந்த முதலிமார்கள் மக்களின் மனதை மாற்ற முயன்றனர்.கண்டித் திசாவைமாருடன் சேர்ந்திருக்கும் பண்டாரவன்னியன் வன்னியிலிருந்து நெல் மூடைகளைக் கொள்ளையடித்து அனுராதபுரம் பகுதிக்கு எடுத்துச் செல்வதாகவும் கூறி மக்கள் மனதைத் திசைதிருப்ப முயற்சித்தனர்.

இப் பெருந்தாக்குதலுக்குப் பின்னர் வேறு எந்த தாக்குதல்களையும் பண்டாரவன்னியன் நிகழ்த்தவில்லை. எனினும், அவனது படைவீரர்கள் சிலர் ஆங்காங்கே சிறு சிறு கிளர்ச்சிகளைச் செய்து வந்தனர். பண்டாரவன்னியன் மேற்கொண்ட இப் பெருந்தாக்குதலுக்குப் பின்னர் இறம்பைக்குளம் பிரதேசத்தில் ஆங்கிலேய ஆட்சியாளருக்கு எதிராகப் பிரதேசவாசி ஒருவன் பல கிளர்ச்சிகளைச் செய்து வந்தான். அவன் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு திருகோணமலையில் சிறைவைக்கப்பட்டான். (தொடரும்)




## பண்டாரவன்னியனின் பெருந்தாக்குதல்

# 3D வடிவில் செயற்கை மூளை!



கனடா மற்றும் ஜேர்மன் விஞ்ஞானிகள் இணைந்து 3D செயற்கை மூளையைக் கண்டுபிடித்துள்ளனர். ஜேர்மன் Julich Research Center மற்றும் கனடாவின் McGill பல்கலைக்கழக விஞ்ஞானிகளே, இவ்வாறான சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.




65 வயதுடைய இறந்துபோன பெண்ணின் மூளையில் இருந்து உருவாக்கப்பட்ட இந்த செயற்கை மூளை 7,400 சிறிய துண்டுகளாக்கப்பட்டன. இந்த மூளையானது, சாதாரண மனித மூளையைவிட 250,000 மடங்கு அதிக நினைவுத்திறனை தக்க வைத்துக்கொள்ளக்கூடிய சக்தி கொண்டது. 7,400 துண்டுகளில், ஒவ்வொரு துண்டும் மனிதனின் தலைமுடியைவிட அரைவாசியளவு எடையைக் கொண்டுள்ளது. எனவே, இதனை நுண்ணோக்கியின் (microscopic) உதவியுடனேயே பார்க்க முடியும்.

அத்துடன், இந்த 3D செயற்கை மூளையில் 80 பில்லியன் நரம்புக் கலங்கள் அடங்கியுள்ளன. இந்த மூளையானது, தொடர்ச்சியாக 1000 மணித்தியாலங்கள்வரை நடந்த நிகழ்வுகளை நினைவில் வைத்துக் கொள்ளும் திறனுடையது. இந்த செயற்கை மூளையை உருவாக்க 10 ஆண்டுகள் எடுத்தன என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராட்சத பெங்குயினின் எச்சம் கண்டுபிடிப்பு..!



விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479658,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

பெரு நாட்டின் லீமா நகரில் அமைந்துள்ள சென் மார்க்கோஸ் இயற்கை வரலாற்று விஞ்ஞான அருங்காட்சியகத்தின் புதைபடிவ விஞ்ஞானியான றொடொல்ஃபோ சலாஸ் ஜிஸ்மொன்டி, 2006 ஆம் ஆண்டு லீமா நகரில் இருந்து 280 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பெரக்கஸ் தேசிய வனத்திற்கு நீரியல் பறவைகளின் நடத்தைகளை ஆராயவென சென்றிருந்தார்.அங்கு வியப்பூட்டும் வகையிலான பறவை ஒன்றின் எச்சத்தை அவர் கண்டுபிடித்தார். இந்த எச்சம் சிதைவுகளுக்கு உட்படாமல், பாதுகாப்பான முறையில் இருந்ததை அவர் அவதானித்தார். அதன் அளவின்படி, அது வியப்பூட்டும் ஓர் ராட்சதப் பறவையினுடையதாக இருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். எனினும், அந்த பறவையினம் பற்றிய விபரங்களை ஜிஸ்மொன்டியினால் அன்று



புதைபடிவ விஞ்ஞானியான றொடொல்ஃபோ சலாஸ் ஜிஸ்மொன்டி, தனது ஆய்வகத்தில் பெங்குயின் எச்சத்தை ஆய்வுக்குட்படுத்துகின்றார்...



அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், இன்று அந்த எச்சம் ராட்சத பெங்குயின் பறவையினத்தினுடையது என்று இனங்காணப்பட்டுள்ளது.

பண்டைய பெரு நாட்டின் இயோசின் யுகத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இந்த ராட்சத பெங்குயின் இனம், தற்போதுள்ள பெங்குயின்களின் பரிணாம வளர்ச்சியினை எமக்கு அறியத்தருவதாக புதைபடிவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ராட்சத பெங்குயின் பறவையினம் 36 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளன என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். நீர்வாழ் பறவையினத்திற்குரிய இந்த பறவையொன்றின் உயரம் 1.5 மீற்றர் ( 5 அடி) ஆகவும் நிறை 60 கிலோ கிராம் ஆகவும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், தற்போதுள்ள பெங்குயின்களில் மிகப் பெரியதாகக் கருதப்படும் றோயல் பெங்குயின்களைவிட, இந்த பண்டையகால பெங்குயின்கள் விசாலமானவை எனத் தெரியவந்துள்ளது.

பறக்க முடியாத இந்த பறவையினம், தமக்கிருக்கும் இறக்கைகளைப் போன்ற செட்டைகளைப் பயன்படுத்தி நீந்துவதில் திறமை மிக்கவை. இவற்றின் இறக்கைகள் நீந்துவதற்கு ஏற்ப பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளன. உயிரியல் விஞ்ஞானிகளின் கருத்தின்படி, இன்றளவில் உலகில் 15 வகையான பெங்குயின்கள் உள்ளன. இவற்றை 6 பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆனால், இவை அனைத்தும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். 'பெங்குயின்' என்ற பெயரானது, வேல்ஸ் மொழியில் இரு சொற்களால் உருவானதாகும். அதன் அர்த்தம் 'வெந்நிறத் தலையை உடையவன்' என்பதாகும்.



இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆர்க்டிக் வலயத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் குறுகிய இறக்கைகளைக்கொண்ட, கருப்பு-வெள்ளை நிறத்திலான ராட்சத ஒக் கடல் பறவை இனத்திற்கே முதன்முதலில் இப்பெயர் இடப்பட்டிருந்தது. இன்று அந்த பறவையினம் அழிந்து விட்டது. அந்த பறவையினம் பெங்குயின் பறவையினத்தைப் போன்றது. ஆனால், அப்பறவைகள் பறக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தன.

தென்முனைப் பகுதியிலேயே பெங்குயின்கள் பெருமளவில் வாழ்கின்றன. அண்டார்க்டிக்காவின் பனிமூடிய பகுதிகளில் இருந்து ஹோர்ன் முனை, நல்வாழ்த்துக்கள் முனை, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து வரை பெங்குயின்களைக் காண முடியும். வட முனைப் பகுதியில் பெங்குயின்கள் இல்லை. அண்டார்க்டிக்காவில் இருவகை பெங்குயின்கள் மட்டுமே வாழ்கின்றன. கடல்சார் வாழ்க்கைக்கு நன்கு பரிணாம வளர்ச்சி அடைந்தவையாக பெங்குயின்கள் உள்ளன. ஆனால், பெரும்பாலான விஞ்ஞானிகள், 'பெங்குயின்' என்பது ஒரு பறவையினமன்று என்றும் பறக்கக்கூடியவாறு அவற்றின் இறக்கைகள் வளர்ச்சி பெறவில்லை என்றும் வாதிடுகின்றனர்.

-பிரியா

## வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
செ.நிரோசன்,
சுன்னாகம்.

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டை ஒன்றில் சில மீன்கள் வசித்து வந்தன. அந்த மீன்களிடம் ஒரு காகமும், எலியும் நட்புடன் பழகி வந்தன. யாரேனும் மீன்களுக்குத் தொல்லை கொடுத்தால், காகம் அவர்களைக் கொத்தி விரட்டிவிடும். இந்த மீன் கூட்டத்தில் ஒரு மீன் மட்டும் தங்க நிறத்துடன் மிக அழகாக இருந்தது. அது தன் அழகைப் பற்றி நினைத்து எப்போதும் கர்வத்துடன் திரிந்தது. அழகற்ற தோற்றத்துடன் இருந்த காகத்தையும் எலியையும் வெறுத்தது.

அது ஏனைய மீன்களிடம் "அவற்றுடன் நட்புக் கொள்வேண்டாம்!" என்று கூறியது. எனினும், அங்குள்ள மீன்கள் தங்க மீனின் பேச்சுக்கு செவி சாய்க்கவில்லை. எனவே, தங்க மீன் மட்டும் காகத்தையும், எலியையும் கண்டால், குட்டையின் அடியில் சென்று மறைந்துகொண்டது. ஒருநாள் காகம் இரைதேட



# அழகு தந்த ஆபத்து!

சென்றிருந்தது. அவ்வேளையில், அந்தக் குட்டைக்கு சில சிறுவர்கள் வந்தனர். அவர்கள் கையில் ஒரு சிறிய வலை இருந்தது. அச்சிறுவர்கள் குட்டையிலிருந்த தங்க மீனைப் பார்த்து விட்டனர். தங்கள் வலையைக்கொண்டு அதைப் பிடித்து, ஒரு நீர் நிரம்பிய குவளையில் போட்டு எடுத்துச் சென்றனர். அதைக்கண்ட ஏனைய மீன்கள் அனைத்தும் மனம் வருந்தின. தங்க மீனும், தான் சிறுவர்களிடம் அகப்பட்டுக் கொண்டதை நினைத்து அழுதது.

சிறிது நேரத்தில் இரை தேடச் சென்ற காகம் திரும்பி வந்ததும், தங்க மீனுக்கு ஏற்பட்ட ஆபத்தை ஏனைய மீன்கள் காகத்திடம் கூறின. உடனே காகமும், சிறுவர்கள் சென்ற திசையில் பறந்து சென்றது. சிறுவர்கள் தங்க மீனைக் கொண்டுசெல்வதைப் பார்த்த காகம், அவர்கள் பின்னாலேயே அவர்கள் அறியாதபடி பறந்து சென்றது. சிறுவர்கள் தங்கள் வீட்டின் முன் அறையில் இருந்த ஒரு கண்ணாடித் தொட்டியில் தங்க மீனைப் போட்டனர்.

மீனுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு காகம் வருந்தியது. அது குட்டைக்குத் திரும்பிச் சென்று தான் பார்த்த விடயத்தை ஏனைய மீன்களிடமும், எலியிடமும் கூறியது. அதைக்கேட்ட மீன்கள் காகத்திடம், "நண்பரே! எப்படியேனும் தங்கமீனைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்?" என்று வேண்டின. எலியும், காகத்திற்கு உதவி செய்வதாகக் கூறியது. அதன்படி, மறுநாள் காகமும், எலியும் சிறுவர்களின் வீட்டை நோக்கிச் சென்றன. காகம் அருகிலிருந்த ஒரு மரத்தில் அமர்ந்துகொண்டது. அவ்வீட்டின் கிணற்றடியில் ஒரு வாளியும், அதில் சிறிது நீரும் இருந்தது. அதைக்கண்ட எலி யாரும் அறியாதபடி வீட்டிற்குள் சென்று ஒரு சிறிய ப்ளாஸ்டிக் குவளை ஒன்றைக் கௌவிக்கொண்டு வந்தது. குவளையில் வாளியிலுள்ள நீரை சிறிது எடுத்துக்கொண்டு கிணற்றடியில் காத்திருந்தது.

காகம் சற்றும் தாமதிக்காமல், ஜன்னல் வழியாக வீட்டினுள் பறந்துசென்று, மீன் தொட்டியின் மீது அமர்ந்து தங்கமீனிடம் தன் திட்டத்தைக்கூறி, அதனை தன் வாயில் கௌவியபடி பறந்து சென்று எலியின் கையிலிருந்த நீர் நிரம்பிய குவளையில் போட்டது. பின்னர் சிறிதும் தாமதியாத காகம் அந்த குவளையை வாயில் கௌவிக் கொண்டு, குட்டைக்கு வந்து சேர்ந்தது. குவளையை குட்டைக்குள் காகம் சாய்க்க, தங்கமீன் அதிலிருந்து குட்டைக்குள் தாவியது. காகம் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் எலியும் அங்கு வந்து சேர்ந்தது.

உடனே ஏனைய மீன்கள் தங்க மீனிடம் "பார்த்தாயா.... நீ உன் அழகைக் குறித்துக் கர்வம் கொண்டிருந்தாய். அந்த அழகே உனக்கு சிறுவர்களிடமிருந்து ஆபத்தைக் கொண்டுவந்தது. நம் நண்பர்களான காகமும், எலியும் கறுப்பாக இருக்கின்றனர் என்று அவர்களை நீ வெறுத்தாய். ஆனால், இன்று அவர்கள் தான் உன்னைக் காப்பாற்றியிருக்கின்றனர். இனியேனும் அழகை நினைத்து கர்வம் கொள்ளாமல் காகத்திடமும், எலியிடமும் நன்றியோடும், நட்போடும் நடந்துகொள்!" என்று கூறின.



# அதிரடி ஆட்டம்!



## அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....

23

**இதுவரை....**

*சிறுவர்கள் மூவரினதும் பிடியில் அகப்பட்ட இராமபுத்திரன், தனது கையிலிருந்த கருவிகளைப் பற்றி கூறிக்கொண்டிருக்கையில், மூவரினதும் 'தாங்கள் எவ்வாறு இங்கிருந்து தப்பிக்கலாம்' என்ற கேள்விக்கு பதிலளிக்காமல் இடி இடியென சிரித்தார்.*

**இனி....**

"முட்டாள்களே! என்னைத் தவிர, இங்கு இன்னும் பத்து விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களைக் கொன்றாலும் இந்தப் படைப்பு உலகத்தை வலம் வந்துகொண்டிருக்கும் ஆயுதம் தாங்கிய ரொபோக்கள், சமிக்ஞை கிடைத்தவுடன், ஒரு செக்கனில் எதிரிகளை அழிக்கக் கூடிய ஏவுகணைகள், தப்பியோட விடாமல் தாவிப் பிடிக்கக்கூடிய இயந்திர மிருகங்கள், பருந்து போல பறக்கக்கூடிய இயந்திர வௌவால்கள்... இவற்றிலிருந்து தப்புவதென்பது முடியாத காரியம் தம்பிகளே! எங்கள் பதினொரு பேரைத்தவிர வேறு எவரும் இந்தப் பாதுகாப்புப் பிரதேசத்துக்குள் நுழையவோ, வெளியேறவோ முடியாது! ஏனெனில், எங்கள் பதினொரு பேரினதும் விபரங்கள் மட்டுந்தான் இந்த இயந்திரங்களின் இதயத்துக்குள் பதிவாகியிருக்கின்றன" என அடுக்கிக்கொண்டே போனார் இராமபுத்திரன்.

அதேநேரம் யாரோ நடந்துவரும் சலனம் கேட்டது. சிறுவர்கள் மூவரும் மிரண்டு போய்ப் பார்த்தார்கள்.

வந்தவன் விர்ரென்று அறைக்குள்ளேயே நுழைந்தான். முகமெல்லாம் மஞ்சள் பூசிக் கொண்டவன் போல அவன் இருந்தான். மங்கோலிய இனத்தவனாக இருக்கலாம். பார்ப்பதற்கு விநோதமாகத் தெரிந்தான். அவர்கள் இரண்டு தாக்கும் கருவிகளையும் மறைத்துக்கொண்டார்கள். வந்தவன் இராமபுத்திரனைப் பார்த்து "ஏதாவது பிரச்சினையா?" என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்றார் இராமபுத்திரன்.

"விஞ்ஞானி இராமபுத்திரன். உங்களை தலைவர் கூப்பிடுகிறார். இவர்களை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றான் அவன். இராமபுத்திரன் ஆனந்தத்துடன் அங்கிருந்து வெளியேறினார். அவர் போனதும் வந்தவன் மூன்று சிறுவர்களையும் அற்பப் பிராணிகளைப் பார்ப்பது போல பார்த்தவாறு கோபத்துடன் அவர்களின் அருகே வந்தான். மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். திடீரென ஒரு சூபீர்ப் பாய்ச்சல். ஒரே அமுக்கு மல்லாந்தான் மங்கோலியன். திரு திருவென விழித்தான். அவன் சுதாரித்துக்கொள்ளவதற்கு முன் பிரியன் மறைத்து வைத்திருந்த இரண்டு கருவிகளையும் வெளியே எடுத்தான். ஒன்றை அஷ்வினிடம் கொடுத்தான். அந்தக் கருவிகளைப் பார்த்ததும் மங்கோலியனின் முகம் நிறம் மாறியது.

"இது.... எப்படி?" அவசரமாகக் கேட்டான் ஆங்கிலத்தில்.

அஷ்வின் புத்திசாதுர்யத்துடன், "விஞ்ஞானி இராமபுத்திரன்தான் கொடுத்தார்" என்று பதிலளித்தான்.

மங்கோலியன் திகைத்தான். இந்தச் சிறுவர்களுடன் இராமபுத்திரன் சற்று அதிகமாகவே பழகிவந்ததாக அவன் அறிந்திருந்தான். இராமபுத்திரன் சிறுவர்களுடன் சேர்ந்து நாடகமாடுகிறாரா? அவர் மனதில் வேறு ஏதாவது திட்டங்கள் இருக்குமோ! அவன் மனம் குழம்பி அலைபாய்ந்தது.

அஷ்வின் ஒரு விநாடி எதையோ முணுமுணுத்துக் கொண்டு கையிலிருந்த 'ஸ்பிறே கில்லரை' மங்கோலியன் பக்கமாகத் திருப்பிப் பிசிறியடித்தான்.

"நோ.... நோ....' என்றபடி கொஞ்சம் கொஞ்சமாக மங்கோலியன் மௌனமாகிக்கொண்டிருந்தான். சில விநாடிகளில் இராமபுத்திரன் ஓடோடி வந்தார்.

"குட்டிப் பிசாசுகளே! இவனை என்ன செய்தீர்கள்?" அவரது குரலில் பதட்டம் தெரிந்தது.

"நாம் எமது பெற்றோரை இனி பார்க்க முடியாது என்பது எமக்குத் தெரியும். அதனால், நாங்கள் சாகவும் துணிந்துவிட்டோம். உங்களது பயமுறுத்தல் எங்களை ஒன்றும் செய்யாது. நாங்கள் சொல்வதை முதலில் கேளுங்கள். இல்லையென்றால், இவனது கதிதான் உங்களுக்கும். உடனடியாக இங்குள்ள நேரடி ஒளிபரப்பை நிறுத்துங்கள்" என்றான் பிரியன்.

"என்ன பயமுறுத்துகிறாயா?" என்று கோபத்துடன் கோட்டார் இராமபுத்திரன்.

அஷ்வின் அந்த நவீன துப்பாக்கியை அவரது இதயத்துக்கு நேராக நீட்டினான்.

"அவசரப்படாதே! நான் நேரடி ஒளிபரப்பை நிறுத்துகிறேன்" என்றவாறு நேரடி ஒளிபரப்பைத் தடை செய்துவிட்டுத் திரும்பினார்.

"இப்போது நாங்கள் உங்களது தலைவரின் அறைக்குள் நுழைய வேண்டும்" என்றவாறு இராமபுத்திரனை நோக்கினான் அஷ்வின்.

(தொடரும்)

பன்-பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பெரு மற்றும் தடகள விளையாட்டுப் போட்டிகளில், பெரு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 29 ஆம் திகதி வரை நான்கு கட்டங்களாக நடைபெற்று முடிந்துள்ளன. பெரு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் சில முடிவுகள் இதோ.....

## உடற்பயிற்சிப் போட்டிகள்



வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. இதில் பெண்கள் அணிகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. இரண்டாவது இடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றுக்கொண்டதோடு, மூன்றாவது இடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.

ஆண்கள் அணிகளில் முதலாம் இடத்தினை ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. இரண்டாமிடத்தினை இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி பெற்றுக்கொண்டதோடு, மூன்றாம் இடத்தை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது.



## கரப்பந்தாட்ட வெற்றிகள்

கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை, வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் 15, 17,19 வயதுப் பிரிவுகளுக்குட்பட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன. 15 வயது ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி முதலிடத்தையும் இரண்டாம் இடத்தினை கோப்பாய் மகா வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை கிளிநொச்சி இராமநாதபுரம் ஜி.ரி.எம்.எஸ்.அணியும் பெற்றுக்கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் முதலிடத்தினை தலைமன்னார் ஜி.ரி.எம்.எஸ்.அணி பெற்றுக்கொண்டது. இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே துணுக்காய் பாண்டியன்குளம் ஜி.ரி.எம்.எஸ் அணி, யாழ்.வயாவிளான் மகா வித்தியாலய அணி என்பன பெற்றுக்கொண்டன.







17 வயது ஆண்கள் பிரிவில் முதலிடத்தினை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தினை முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை இராமநாதபுரம் ஜி.ரி.எம்.எஸ்.அணியும் பெற்றுக்கொண்டன.

17 வது பெண்கள் பிரிவில் முதலிடத்தினை ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயமும் இரண்டாமிடத்தினை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.













19 வயது ஆண்கள் பிரிவில் முதலிடத்தினை புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது. இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயமும் மன்னார் நானாட்டான் வித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் முதலிடத்தினை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பெற்றுக்கொண்டதோடு, இரண்டாமிடத்தினை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. மூன்றாமிடத்தினை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

## எல்லே போட்டி முடிவுகள்

19 வயது ஆண், பெண் எல்லே போட்டிகள் வவுனியா உள்ளூராட்சி மன்ற விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன. ஆண்களுக்கான எல்லே போட்டியில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி செம்பியனாகியது. இரண்டாமிடத்தினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை புதுக்குளம் மகா வித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன.







பெண்களுக்கான எல்லே போட்டியில், வடமராட்சி மணற்காடு ஜி.ரி.எம்.எஸ் அணி செம்பியனாகியது. இரண்டாமிடத்தினை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணியும் பெற்றுக்கொண்டன.

சு.சுரேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரங்கள், மலைச் சிகரங்கள் என்பனவற்றுக்கு மேலாக இலகுவாகப் பறந்து பயணிக்கவும் தூரப் பயணங்களை மிக இலகுவில் நிறைவேற்றிக்கொள்ளவும் உகந்த போக்குவரத்துச் சாதனமாக 'விமானங்கள்' கருதப்படுகின்றன. தரைமார்க்கமாக அல்லது கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் தூரப் பயணத்திற்கு பல மணித்தியாலங்களோ, சில நாட்களோ தேவைப்படும் நிலையில், விமானத்தின்மூலம் அத்தகைய பயணங்களை குறுகிய நேரத்தில், மிக இலகுவாக மேற்கொள்ள முடியும். காற்றைவிட நிறை குறைந்த அலுமினியம் போன்றதோர் உலோகம் மற்றும் புதிய தொழில்நுட்பத்தினால் தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் போன்ற மூலப்பொருட்களினாலேயே இத்தகைய விமானங்கள் உருவாக்கப்படுகின்றன.



# மனிதன் விண்

## புராதனக் கதைகளில் வரும் பறக்கும் சம்பவங்கள்


வானில் பறந்த மனிதர்கள், விலங்குகள் மற்றும் கடவுள்கள் குறித்த கற்பனைக் கதைகள், அவை தொடர்பான விடயங்களை சித்தரிக்கும் ஓவியங்கள், மத நம்பிக்கைகள் என்பன குறித்த கருத்துக்கள் பண்டைய கால மக்களிடையே பரவலாகக் காணப்பட்டன. கி.மு. 350 இல் பபிலோனியர்கள் கற்களால் வடித்த அதீனாவின் கதையின்படி, கழுகின்மீது அமர்ந்து-பறந்து சென்ற நத்தை ஒன்று குறித்து குறிப்பிடப்படுகின்றது.

கீ கங்க் ஷீ என்ற பிரபல்யம் பெற்ற சீன இளவரசனின் வரலாற்றுக் கதையின்படி, அவரிடம் விண்ணில் செலுத்தக்கூடிய குதிரை வண்டி ஒன்று இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாரசீக மன்னனான காயி கோஸ் என்பவரிடம் பறந்து செல்லக்கூடிய சிம்மாசனம் இருந்ததாக பலதரப்பட்ட புராதனக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கிரேக்க புனைகதைகளில் வரும் பெலரபோனின் பெரிசஸ் என்ற குதிரையிடம், பறந்து செல்லக்கூடிய ஒரு சோடி இறக்கைகள் இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. ரோமானிய வரலாற்றில் கூறப்படும் மர்க்கரி என்ற தூதர், தமது கால்களில் இருந்த சிறிய இறக்கைகளினூடாக பறக்கும் வாய்ப்பினை பெற்றிருந்தார் என்று குறிப்பிடப்படுகின்றது. அதேபோன்று, இராமாயணத்தில் குறிப்பிடப்படுவதன்படி, இராவணன் இந்தியாவுக்கு பறந்துசென்று சீதையை சிறைப்பிடித்து வர மயில் வாகனத்தைப் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.



ஆகாய விமானத்தின் பிறப்புக்கு வழியமைத்த ஓர்வில் ரைட், வில்பர் ரைட் சகோதரர்கள்







இவைபோன்று, விண்ணில் பறந்த சம்பவங்களை சித்தரிக்கும் ஏராளமான கதைகள் உள்ளன. கற்பனைக்கதைகள், புராதனக் கதைகளில் ஆரம்பித்து இன்று பாவனையில் உள்ள பட்டம் முதல் சுப்பர்சொனிக் விமானம் மற்றும் விண்வெளி ஓடம்வரை தொடரும் இக்கதை விசித்திரமானதாகும். மனிதன் முதலில் உருவாக்கிய பறக்கும் உபகரணம் பட்டமாகும். முதலாவது பட்டம் இற்றைக்கு 2210 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு. 2000 இல் சீனாவில் உருவானதாகக் கூறப்படுகின்றது. காலப்போக்கில் 'க்ளைடர்' என்ற பறக்கும் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் முதன்முதல், பறந்தவராக ஸ்பெய்னின் கோடோபாவினைச் சேர்ந்த அப்பாஸ் இப்னு பிர்னாஸ் கருதப்படுகின்றார். இது கி.பி. 875 இல் நிகழ்ந்துள்ளது. 15 ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் லியனாடோ டாவின்சி, மனிதனின் வானில் பறக்கும் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவ்வாறான இயந்திரங்கள் சிலவற்றின் படங்களை கற்பனையாக வரைந்துள்ளார். தற்போது பயன்பாட்டில் உள்ள ஹெலிகொப்டரின் திட்டவரைபும் அதில் அடங்கியிருக்கின்றது. எனினும், அவற்றை அவர் வரைந்தாரே தவிர, அதனை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை.

ஆளின்றி வானில் செல்லக்கூடிய உபகரணமாக வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பலூனை பயன்படுத்திய பெருமை சீனர்களையே சாரும். சீனரான சூகே லியான், எதிரிப் படையினரை விரட்டியடிக்கவும் படையினருக்கு சமிக்ஞைகளை அனுப்பவும் இவ்வாறான பலூன்களைப் பயன்படுத்தினர். 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் வளிமண்டலத்தில் உள்ள வாயுக்களைப் பற்றி அறிய ஆரம்பித்த காலகட்டங்களில் ஹைட்ரஜன் வாயு குறித்தும் தெரியவந்தது. இதன் அடிப்படையில், ஹைட்ரஜன் பலூன் தோற்றம் பெற்றது. இக்காலப்பகுதியில் பௌதிகவியல் விஞ்ஞானிகளினால் பொறியியல்துறை, பௌதிக விஞ்ஞானம், ஈர்ப்புவிசை ஆகிய விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளும் அதிலும் குறிப்பாக நியூட்டனின் ஈர்ப்பு விசை குறித்த கோட்பாட்டுச் சிந்தனைகளும் விமானங்களின் கண்டுபிடிப்புக்கும் உருவாக்கத்திற்கும் உதவின.


## விமானம் கண்டுபிடிப்பு

'ரைட் சகோதரர்கள்' என்றழைக்கப்படும் வில்பர் ரைட் (ஏப்ரல் 16, 1867-மே 30, 1912), ஓர்வில் ரைட் (ஒகஸ்ட் 19, 1871-ஜனவரி 30, 1948) என்ற அமெரிக்க சகோதரர்கள் விமானத்தைக் கண்டறிந்த முன்னோடிகள் ஆவர். அமெரிக்காவின் வட கெரோலினா-கிட்டி ஹோக்கில் 1903 டிசம்பர் 17 ஆம் திகதி முதன்முதலாக அவர்கள் தாம் உருவாக்கிய எஞ்சின் ஊர்தியை இயக்கி, அதில் ஓர்வில் ரைட் 12 வினாடிகள் பூமிக்கு மேல் பறந்தார். அடுத்து வில்பரும் ஓர்விலும் இணைந்து தாம் உருவாக்கிய வானூர்தியை மேலும் மேம்படுத்தி, பரீட்சார்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதற்கமைய, இருபதாம் நூற்றாண்டின் மகத்தான சாதனையாக 1903 இல் ரைட் சகோதரர்களின் வானூர்தி கண்டுபிடிப்பு கருதப்படுகின்றது.

## வானூர்திகளை வகைப்படுத்தல்

பலூன்கள் முதல் ஹெலிகொப்டர் வரையிலான பறக்கக்கூடிய அனைத்து சாதனங்களும் 'வானூர்திகள்' எனப்படுகின்றன. இதில் இறக்கைகள் கொண்ட, ஜெட் என்ஜின்கள்கொண்ட பிரிவுக்குள் 'விமானங்கள்' அடங்கும். க்ளைடர், வெப்பவாயு பலூன் என்பன இறக்கைகள் அற்ற, என்ஜின் அற்ற பிரிவை சேர்ந்தவை. வடிவம் மற்றும் பருமன் என்பனவற்றின் அடிப்படையில் விமானங்களின் பயன்பாடு பிரித்தறியப்படுகின்றது. இரு சோடி இறக்கைகள் உள்ளவற்றை 'பய்பிளேன்ஸ்' என்பர். பொதுவாக வளிமண்டலத்தில் உள்ள காற்றைவிட அடர்த்தி குறைந்த வாயுவைப் பயன்படுத்தி உருவாக்கப்படுவது 'வெப்பவாயு பலூன்' எனப்படுகின்றது. பயணிகளையும் பொருட்களையும் காவிச் செல்ல 'போக்குவரத்து விமானங்கள்' பயன்படுத்தப்படுகின்றன. இந்த முறையில் தயாரிக்கப்பட்ட விமானங்களினால் யுத்தத் தாங்கிகளையும் எடுத்துச் செல்ல முடியும். அவ்வாறே, என்ஜின் அற்ற விமானங்கள் 'க்ளைடர்' எனப்படுகின்றன. ஒலியைவிட வேகமாகப் பயணிக்கக்கூடிய 'சுப்பர்சொனிக்' எனப்படும் அதிவேக பயணிகள் விமானங்கள் மத்தியில் கொன்கோட் சிறப்பு





டர்பைன் என்ஜின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ணை வென்ற கதை

மிக்கதாகும். மணித்தியாலத்திற்கு 1,240 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய ஆற்றல் இதற்குண்டு. இது சாதாரண விமானங்களை விட இரண்டு மடங்கு வேகம் கொண்டது.

## கட்டமைப்பு

போயிங் 747-400 போன்ற பிரபல்யம் வாய்ந்த விமானங்கள், எளிய




முறையிலான அடிப்படை திட்ட வடிவமைப்பினைக் கொண்டுள்ளது. விமானத்தில் உள்ள பிரதான எரிபொருள் தாங்கியானது, மெல்லிய உலோக சிலிண்டரைப் போன்றது. இறக்கைகளின் இயக்கமானது எரிபொருள் தாங்கியின் மத்தியில் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. பின் வால் பகுதியும் பிற்பகுதி இறக்கைப்பகுதிகளும் விமானத்தின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. உட்பகுதி இரண்டு அடுக்கு மாடிகளைக் கொண்டது. மேற்பகுதி மாடி பயணிகளுக்கானது. கீழ்பகுதி பொருட்கள் எடுத்துச் செல்லப் பயன்படும். இந்த அனைத்து அம்சங்களும் விமானத்தின் மூக்குப் பகுதி முதல் வால்பகுதி வரை உள்ள கட்டமைப்பினுள் உள்ளடங்குகின்றன.

## விமானிகள் அறை

விமானத்தின் முன்பாகத்தில் உள்ள விமானக் கட்டுப்பாட்டு அறையில் இருந்தே விமானம் இயக்கப்படுகின்றது. விமானத்தினை செலுத்தும் பிரதான விமானி, உதவி விமானிகள், பொறியியலாளர்கள் இந்த கட்டுப்பாட்டு அறையினுள்ளேயே இருப்பர். ஆனால், அதுவே, சிறிய-எளிய ரக விமானமாயின், அதில் உதவி விமானியும் பிரதான விமானியும் மட்டுமே இருப்பர். பாரியளவிலான ஜம்போ ஜெட் பயணிகள் விமானத்தில் இரு பிரதான விமானிகளும் உதவி விமானிகள் இருவரும் இருப்பர். இதில் விமானிகள் அறையும் விசாலமானதாக இருக்கும். விமானத்தின் கட்டுப்பாட்டுப் பகுதி, தொலைத்தொடர்பு உபகரணங்கள், வானொலி கட்டுப்பாட்டு உபகரணங்கள் மற்றும் ரேடார் கருவி என்பனவும் விமானிகள் அறையிலேயே இருக்கும். விமானம் ஆகாயத்தில் பறப்பதற்கு இந்த கட்டுப்பாட்டுப் பகுதியும் உபகரணங்களுமே உதவுகின்றன.




## விமானத்தின் பணியாளர் குழு

விமானத்தில் பயணிக்கும் பயணிகளை பாதுகாப்பாக அழைத்துச்செல்லும் பொறுப்பு விமானத்தின் பணியாளர் குழுவுக்கு உரியதாகும். இந்த பணியாளர் குழுவில் விமானிகள் மற்றும் ஆண்-பெண் பணியாளர்கள் அடங்குவர். விமானத்தினுள் பயணியொருவர் நுழைந்ததிலிருந்து வெளியேறும்வரை அவர்களின் நலன்களைப் பேணி பணிவிடைகளைச் செய்யும் பொறுப்பு விமானப் பணியாளர்களுக்குரியதாகும். பயணிகளுக்கு உணவுகள்-பானங்களை பரிமாறல், பொழுதுபோக்கு அம்சங்களுக்கான வசதிகளை செய்துகொடுத்தல் என்பன விமானப் பணியாளர்களின் கடமையாகும். இந்த வசதிகள் பயணிகள் பயணிக்கும் வகுப்பினைப் பொறுத்து மாறுபடும். விமானத்தினுள் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்பட்டால், உயிர்பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைகளை அவர்கள் துரிதகதியில் வழங்குவர்.




## விமானத்தின் என்ஜின்

விமானத்தின் மேற்பகுதியில் அழுத்தத்தினை ஏற்படுத்தும் பணியினையே என்ஜின்கள் செய்கின்றன. இதற்காக பலதரப்பட்ட என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன. பிஸ்டன் என்ஜின் மற்றும் டர்பயின் புரொபெல்லர் என்ஜின்களுக்கு பொருத்தப்பட்டுள்ள இறக்கைகளுடன் தொடர்புடைய விசாலமான காற்றாடிகளை சுழலவிடுவதனூடாக, காற்றினைக் கிழித்துக்கொண்டு விமானங்கள் பறக்கின்றன. இவற்றைத் தவிர, டர்போ ஜெட் என்ஜின் மற்றும் டர்போ ஸ்பேண் என்ஜின் என்பனவும் விமானங்களுக்குரிய என்ஜின்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

## சரக்கு விமானங்கள்

குறிப்பாக பொருட்களை காவிச் செல்லும் விமானங்களை 'Cargo aircraft' அல்லது 'freighter' என்று ஆங்கிலத்தில் கூறுவர். விமானத்தின் மூக்குப்பகுதியில் உள்ள திறக்கக்கூடிய பாரிய கதவுப் பகுதியினூடாகவே பொருட்கள் ஏற்றப்படுகின்றன. போயிங் 747 விமானத்தினைப் பொறுத்தவரையில், அதனை பயணிகள் விமானமாகவும் சரக்கு விமானமாகவும் இலகுவாகப் பயன்படுத்த முடியும்.

கவிதா


வாயு பலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ..................................................

★ **கீழ்க்காணும் பந்தியை வாசித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஊக்கமும், விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று எமது வீடுகளில் மின்விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின்விளக்குகள் எம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். தமது முதல் முயற்சியிலேயே அவர் தோல்வி கண்டார். தொடர்ந்தும் தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். பலமுறைகள் தோல்வியைக்கண்ட அவர், இறுதியில் வெற்றி கண்டார். மின்விளக்கு எரியத் தொடங்கியது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கு இணங்க வெற்றிபெற்றார்.

01) யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது?

.................................................................

02) வெற்றிக்கு ஏணிப்படிகளாக இங்கு கருதப்படுபவை எவை?

.................................................................

03) மின்விளக்கு கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது?

.................................................................

04) பலமுறை தோல்வியைக்கண்ட எடிசன் பின்னர் வெற்றி கண்டதன் காரணம் யாது?

.................................................................

05) இங்கு இடம்பெற்றுள்ள மேற்கோளாக அமையும் கூற்று யாது?

.................................................................

06) 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கு ஒத்த இன்னொரு பழமொழி தருக?

.................................................................

07) அஃறிணை பெயர்ச்சொல் ஒன்று தருக?

.................................................................

08) ஒத்த கருத்துச் சொல் தருக.

1. வெற்றி: ................................ 2. வீடு: ................................

09) ஒற்றுமையை எடுத்துக்காட்டும் பழமொழி ஒன்று தருக?

.................................................................

10) 'பூசி மெழுகுதல்' இவ் மரபுத் தொடர் புலப்படுத்தும் கருத்து யாது?

.................................................................

11) 1. குழந்தைகளை உறங்க வைக்கப் பாடப்படும் பாட்டு;

.................................................................

2. அறுபதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா எது?

.................................................................

3. கோழி-குஞ்சு போல; தவளை .................................

12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. Shall we go home : ................................
2. I will come today : ................................
3. May I go out : ................................

13) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. தயவு செய்து அமருங்கள்: ................................
2. தயவு செய்து உள்ளே வாருங்கள்: ................................
3. உங்களால் பாட முடியுமா? : ................................

14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. வந்து அமருங்கள் : ................................
2. பாட்டுப் பாடுங்கள் : ................................




15) சரியான விடையின்கீழ்க் கீறிடுக.

1. நான் பரீட்சையில் ................................ அடைந்தேன்.
(வெற்றி, சித்தி, மகிழ்ச்சி)

2. மான் கூட்டம் சிதறி ................................
(ஓடின, ஓடியது, ஓடுகின்றன)

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையின்கீழ்க் கீறிடுக.**

16) 

உருவில் உள்ள தாவரத்தின் பெயர் யாது?

1. ஆமணக்கு 2. வல்லாரை
3. குப்பைமேனி 4. ஆடாதோடை

17) சிங்கக்கொடியில் பச்சை நிறம் குறிக்கும் இனம்;

1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம்கள் 4. பறங்கியர்

18) வாயினால் கழிவகற்றும் பிராணி;

1. எலி 2. கீரி 3. வௌவால் 4. காகம்

19) விவசாயிகளின் பகைவன் பின்வருவனவற்றுள் எது?

1. தேனீ 2. மண்புழு 3. நத்தை 4. காகம்

20) பனிக்கட்டி நீரின் ................................ வடிவமாகும்.

1. வாயு 2. திரவம் 3. திண்மம் 4. வடிவமற்றது

21) டெங்கு பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?

1. எல்லா நுளம்புகளும் டெங்கு நோயைப் பரப்புகின்றன.
2. டெங்கு நோய் பரவுவதைத் தடுக்க முடியாது.
3. டெங்கு நோயைக் குணப்படுத்தலாம்.
4. டெங்கு, ஈயினால் பரவும் ஒரு நோயாகும்.

22) 'தலதா மாளிகை' அமையப்பெற்றுள்ள மாகாணம் எது?

1. மேல் மாகாணம் 2. ஊவா மாகாணம்
3. மத்திய மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

23) 

இக்குறியீடு காட்டும் விளக்கம் யாது?

1. மீள் சுழற்சி 2. கவனமாகக் கையாளுங்கள்
3. மின்சாரசபை 4. வாகனம் திரும்பிச் செல்க

24) 

இப்படத்தில் காணப்படுபவர் பெயர் என்ன?

1. எப்.ஆர்.சேனநாயக 2. சேர்.டி.பி.ஜயதிலக
3. வில்லியம் கோபல்லவ 4. எஸ்.மகிந்த

25) பச்சையாக உண்ணக்கூடிய இலைக்கறி எது?

1. அகத்தி 2. முருங்கை இலை
3. பொன்னாங்கன்னி 4. வல்லாரை

26) சாம்பல் நிறத்தை நீர் பெற வேண்டுமாயின், அந்நிறத்துடன் எந்த நிறத்தைக் கலக்கவேண்டும்?

1. நீலம்+கறுப்பு 2. பச்சை+ கறுப்பு
3. ஊதா+மஞ்சள் 4. வெள்ளை+கறுப்பு

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் நீரைத் தேடிச் செல்லும் Polaris



சந்திரனின் துருவப் பகுதிகளில் பனியும் நீரும் இருக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக நீண்டகாலமாக ஊகம் நிலவி வருகின்றபோதிலும், அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இதுவரை எந்தவொரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்க வில்லை. எனினும், இது தொடர்பான மாதிரித் திட்டங்கள் கடந்த சில வருடங்களாக முன்வைக்கப்பட்டு வந்தபோதிலும் கடந்த வருடமே முழுமையான செயற்றிட்டமொன்று முன்வைக்கப்பட்டது. அதாவது, 'போலாரிஸ்' (Polaris) எனும் பெயரிடப்பட்ட 'ரோபோ' ஒன்றினை உள்ளடக்கிய 'தளவூர்தி' (Rover) செயற்றிட்டமே அதுவாகும். இந்த போலாரிஸ் தளவூர்தியானது, 2015 ஆம் ஆண்டில் சந்திரனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நீரானது, உறைபனியாக மாற்றம் பெற்று சந்திரனின் துருவப் பகுதிகளில் காணப்படுவதாக நாஸா நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த திட்டத்திற்கென நிதி முதலீட்டை செய்திருப்பதும் நாஸா நிறுவனமேயாகும்.



'எஸ்ட்ரோபொட்டிகஸ்' என்ற நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான வில்லியம் வட்டேகர் என்பவரே 'போலாரிஸ் தளவூர்தி' மாதிரித் திட்டத்தை முன்வைத்துள்ளார். இது சந்திரனின் மேற்பரப்பில் நகர்ந்து செல்லக்கூடிய தன்மையைக்கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் வில்லியம் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை வெற்றிகரமாக்கி30 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 'Google lunar X prize' பரிசினை வெற்றிகொள்வதே தனது அவா என்று அவர் மேலும் கூறியுள்ளார்.



போலாரிஸ் தளவூர்தியானது, SpaceXfalcon 9 என்ற ரொக்கெட்டின் மூலமே சந்திரனுக்கு அனுப்பப்படவுள்ளது.

**-280°C** இருண்ட பகுதியில் வெப்பநிலை







விசேட சக்கர அமைப்பு

சந்திரனின் இருள் சூழ்ந்த பகுதிகளில் நீர் இருக்குமிடத்தைத் தேடி பயணம் செய்ய வேண்டியிருக்கும். இதன்போது எதிர்கொள்ளக்கூடிய பனிமிகுந்த நடைமுறைகளைத் தாண்டி வெற்றிகரமாக செயற்படும் தன்மையை இந்த 'தளவூர்தி' கொண்டுள்ளது. அதற்கு ஏற்றவாறான நான்கு சக்கரங்களை இது கொண்டிருக்கும். அத்துடன், சந்திரனின் மண் பகுதியை எடுத்து அதில் நீர் உள்ளதா என்பதை அறிவதற்காக, சந்திரனின் மேற்பரப்பை துளைப்பதற்கான விசேட துளைகருவியொன்றும் இதில் உள்ளது.

தளவூர்தியின் மொத்த எடை **150kg**

தளவூர்த்தி சுமக்கக்கூடிய பொருட் திணிவு **80kg**

தளவூர்தி பயணிக்கும் வேகம் **30cm/s**

தளவூர்தியில் உள்ள முழுமையான மின்சக்தி (சராசரி) **800W**

மூன்று பக்கங்களிலுமுள்ள சூரிய தகடுகள் (1=250W)





போலாரிஸ் தளவூர்தியின் நீளம், அகலம், உயரம். இது செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட கியூரியோசிட்டி தளவூர்தியைவிட அளவில் பெரியது.

இது கொல்ஃப் வண்டியின் அளவை ஒத்தது.

இத்தகைய ஊர்திகளில் 'போலாரிஸ்' முதன்மையானது.

செயற்றிட்டத்திற்கான செலவு டொலர் மில்லியன் **3.6**

தளவூர்தி புவியுடன் தொடர்புகளைப் பேணும் சந்திரனின் மேற்பரப்பினை 3D தொழில்நுட்பத்தில் படமெடுத்து அனுப்பும்.






கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் 'போலாரிஸ்' தளவூர்தியின் தொழிற்பாடு காண்பிக்கப்பட்ட விதம்.



சந்திரனின் மேற்பரப்பை ஒத்த செயற்கை மேற்பரப்பொன்றில் தளவூர்தியை தொழிற்படச் செய்தபோது எடுக்கப்பட்ட படம் ஒன்று.

# கற்றலுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல்



ஒவ்வொரு வயதின் அடிப்படையில் அல்லது காலகட்டத்தின் அடிப்படையில் மனிதர்கள் பல்வேறு வகையான பொறுப்புக் களுக்கு உரித்துடையவராகக் காணப்படுகின்ற னர். எமக்கு உள்ள பொறுப்பை, எப்படியா வது செய்து முடிக்க வேண்டும் என்பதைவிட, அதை சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும் என்பதில் பொறுப்புக்குரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில், 'கற்றல்' என்பது அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பாகக் காணப்படுகின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதைவிட, அப்பொறுப்பை எவ்வாறு சிறப்பாக நிறைவேற்ற முடியும் என்பது குறித்துத் தான் மாணவர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.


பொதுவாக, பொறுப்புக்கள் காணப்படும்போதே, மனிதர்களிடத்தில் 'முயற்சி' என்பது உருவாகின்றது. பொறுப்புக் கள் இல்லையேல் எமது அறிவும் மூளையும் வளர்ச்சியடையாமல் இருக்கும். அத்துடன், எமது அறிவை அதிகரிக்க 'தேடல்' என்பது மிகவும் அவசியம். தேடல், முயற்சி என்ப வற்றின்மூலமே எமது பொறுப்பை சிறப்பாக நிறைவேற்ற முடியும். ஆகவே, கற்றலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள மாணவர்கள் அதற்குரிய முயற்சி களை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

கற்றல் எனும் பொறுப்பை நிறைவேற்றும்போது, அதன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வாய்ப் பளிக்கும் வகையில் கற்றலுக்கான நுட்பங்கள், பயிற்சிகள் என்பன இடம்பெற வேண்டும்.

அத்துடன், கற்றல் எனும் பொறுப்பானது, எம்மால் விரும்பி ஏற்கப்பட வேண்டும். கற்றல் சார்ந்த பொறுப்புக் களை நிறைவேற்றும்போது, நேர முகாமைத்துவம் என்பது முக்கியமானது. அந்தவகை யில், பொறுப்புக்களை துஷ்பிரயோகம் செய்தலோ அல்லது நேரத்தை வீணடித் தலோ கூடாது. எமது பொறுப்பை மட்டும் கவனத் தில்கொண்டு கற்றலில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் கற்றல் சார்ந்த பொறுப்புக் களை சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5212

இஸட்.ராஸிதா,
தென்னகும்புர ம.கல்.,
கண்டி.



அங். இல: 5213

த.சிவனுஜா,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.



அங். இல: 5214

எம்.எஃப்.சாரா,
தெளம்புகஹவத்தை,
அக்குறணை.



அங். இல: 5215

எச்.எம்.மாஹி,
வான் வீதி,
புத்தளம்.



அங். இல: 5216

பா.ரிஷிகரன்,
கோவில் வீதி,
மஸ்கெலியா.



அங். இல: 5217

எம்.இஜாஸ்,
G.S.O வீதி,
ஓட்டமாவடி-02.



அங். இல:5218

எம்.ரிஜா முஹம்மத்,
கஹட்டோவிட்ட,
வெயங்கொட.



அங். இல: 5219

எஸ்.அப்துல்லாஹ் ஹமாஸ்,
மௌலானா வீதி,
நிந்தவூர்-04.



அங். இல: 5220

எஸ்.எச்.நௌபர்,
சாரிநகர்,
மூதூர்-05.



அங். இல: 5221

ச.சந்தரகுமார்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.



அங். இல: 5222

எம்.மேரி டிலக்ஷனா,
பரிகாரி கண்டல்,
முருங்கன்.



அங். இல: 5223

உ.பானுஜா,
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

# மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் காரணிகள்



சமகாலத்தைப் பொறுத்தவரையில் பல நவீன சாதனங்கள், வசதி வாய்ப்புக்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. மாணவர்களின் கல்வியைப் பாதிப்படைய வைக்கின்ற அளவுக்கு இன்று நவீன சாதனங்களும் மறைமுகமாக தாக்கம் செலுத்துகின்றன. பரவலாக இன்று மாணவர்கள் மத்தியில் கையடக்க தொலைபேசிகள் பல கவனக்களைப்புக்களை மாணவர்களுக்கு ஏற்படுத்தி வருகின்றன. அன்றிருந்த காலப்பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இன்றுள்ள மாணவர்கள் உலக மற்றும் அறிவுசார்ந்த விடயங்களை இலகுவாக உடனுக்குடன் பெற்றுக்கொண்டாலும், அவர்கள் தமது கல்வியில் செலுத்துகின்ற ஆர்வம் குறைந்தே காணப்பட்டிருக்கின்றமை ஆய்வுகள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான காரணங்களாவன...

- மாணவர்களின் இணைய மற்றும் கையடக்க தொலைபேசிப் பாவனைகள் தொடர்பாக பெற்றோர்களின் கவனமின்மை.
- பயனுள்ள வகையில் கையடக்கத் தொலைபேசியை கையாளத் தெரியாமை.
- பாடசாலைகளில் கட்டுப்பாடின்மை.

இதுபோன்ற பல காரணங்களால், இன்று மாணவர்கள் தமது கற்கையில் கவனத்தினை குறைத்து தேவையற்ற விடயங்களில் தமது சிந்தனையினை செலவிடுகின்றனர். இதன்மூலமாக மாணவர்கள் எதிர்நோக்கும் உள, உடலியல் தொடர்பான பிரச்சினைகள் பின்வருமாறு;



- உளநெருக்கீட்டுக்கு உட்படுகின்றமை.
- படித்த விடயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியாமை.
- பாடங்களில் கவனம் செலுத்த முடியாமை.



- புகைப்பழக்கத்திற்கு அடிமையாதல்.
- நடத்தைப் பிறழ்வுகளில் ஈடுபடுதல்.

போன்ற உடல், உள காரணிகளால் பாதிப்படைகின்ற மாணவர்கள் இறுதியில் பாடசாலையினை விட்டு விலகிச் செல்கின்ற நிலைக்குச் சென்றுவிடுகின்றார்கள். மாணவர்களாகிய நீங்கள் எத்தகைய நோக்கத்திற்காக நவீன சாதனங்களைப் பயன்படுத்துகின்றீர்கள் என்பதை அறிந்தால் எவ்வித உளப்பிரச்சினையும் உங்களை ஆட்கொள்ளவேண்டிய நிலை ஏற்படாது. (தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

# தெரிந்து கொள்வோம்

- திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருது ஒஸ்கார் விருதாகும். உலகளாவிய ரீதியில் மிகவும் மோசமான படங்களுக்கு வழங்கப்படும் விருது எது?
  கோல்டன் ராஸ்பெரி விருது (Golden Raspbery Award)





- ஆட்காட்டி விரலையும் நடு விரலையும் சேர்த்து V வடிவில் காட்டப்படும் அடையாளத்தின் பொருள் என்ன?
  வெற்றி (Victory) என்பதாகும்
- 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதில் இலங்கை எப்போது? எத்தனையாவது நாடாக இணைந்துகொண்டது?
  1955 டிசம்பர் 14 ஆம் திகதி 65 ஆவது அங்கத்துவ நாடாக இலங்கை ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்துகொண்டது.




- உலக வங்கி எப்போது? எங்கே ஆரம்பிக்கப்பட்டது?
  1944 இல் வொஷிங்டன் நகரில்






- இலங்கையின் 'நவீன நாடகக் கலையின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
  கலையரசு சொர்ணலிங்கம்
- உலகில் ஆகக்கூடிய பதிப்புரிமை பெற்ற புத்தகம் எது?
  கின்னஸ் புத்தகம்




**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ........................................

முகவரி: ........................................

........................................

பாடசாலை: ........................................

வகுப்பு: ........................................

திகதி: ........................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகெங்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பாரியளவில் இடம்பெற்று வருகின்ற இந்தக் காலகட்டத்தில், குறித்த துஷ்பிரயோகங்களை அதிகம் தூண்டிவிடுகின்ற ஊடகமாக இணையம் இருக்கின்றது என்பது பரவலான கருத்தாகும்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் Google



இந்நிலையில், இணைய ஜாம்பவானான Google நிறுவனம், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான விடயங்களை இணையத்தில் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் நேரடியாக களம் இறங்கியுள்ளது.

அதற்கமைய, சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயங்கள், படங்கள் போன்றவை இணையத்தில் பரிமாறப்படுமிடத்து, அவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் கட்டுப்படுத்தும் வகையிலான திட்டமொன்றையே Google நிறுவனம் செயற்படுத்தவுள்ளது. அதன்படி, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் இணையத்தில் பரிமாறப்பட்ட விடயங்களைக் கண்காணித்து, அவை தொடர்பிலான தகவல்களைப் பதிந்துவைப்பதற்கென தனியான தரவுத் தளமொன்றும் (Database) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விடயங்களைப் பரிமாறுபவர்களைக் கண்டுபிடிக்கும் வகையிலான செயற்பாட்டுக் கட்டமைப்புகளும் (Mechanism) உருவாக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, உலகின் பல்வேறுபட்ட சட்ட அமைப்புகள், சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் போன்றவற்றுடன் இணைந்து Google நிறுவனம் செயற்படவுள்ளது. ஆக, சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் Google களம் இறங்கியுள்ளமையை ஆரோக்கியமானதும் முன்னேற்றகரமானதுமான விடயமாகக் கருதலாம்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூலை மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



எஸ்.பிரதீப்



# உலகின் மிகவும் மெலிதான வன்தட்டு






நவீன வளர்ச்சிக்கேற்ப, கணினி தொழில்நுட்ப வளர்ச்சியிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அதற்கமைய, கணினியின் அளவு, இயங்கும் வேகம் உள்ளிட்ட பல விடயங்களில் மாற்றங்களைக் காணக்கூடியதாக இருப்பதோடு, கணினிக்கான துணைச்சாதனங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன.

அந்த வரிசையில், தற்போது உலகில் உள்ள வன்தட்டுக்களில் மிகவும் மெலிதான வன்தட்டு அறிமுகமாகியுள்ளது. இந்த வன்தட்டினை பிரபல சேமிப்பு சாதன உற்பத்தி நிறுவனமான Seagate அறிமுகப்படுத்துகின்றது.







'Seagate laptop ultrathinHDD' என இது அழைக்கப்படுகின்றது.


மடிக்கணினிகள், கைக்கணினிகள் போன்றவற்றிற்காக வென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வன்தட்டுக்கள், வெறும் 5 மில்லிமீற்றர்கள் தடிப்பைக் கொண்டவையாகக் காணப்படுவதுடன், 320 GB மற்றும் 500 GB ஆகிய இரு அளவுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

இதில் 500 GB வன்தட்டின் விலையானது, 80 அமெரிக்க டொலர்கள் ஆக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Photoshop போன்ற மென்பொருட்களில் தேர்ச்சிபெற்றவர்களால் படங்கள், புகைப்படங்களை பல்வேறு விதங்களில் Effect கள் கொடுத்து மாற்றியமைத்துக்கொள்ள முடிகின்றது. ஆனால், Photoshop போன்ற மென்பொருட்களில் பரிச்சயமில்லாதவர்களால் அவ்வாறு முடிவதில்லை.

ஆனால், ஒரு படத்தை Photoshop போன்ற மென்பொருட்




# படங்களை பல்வேறு வடிவங்களுக்கு மாற்றும் இலவச மென்பொருள் அறிமுகம்




களின்மூலம் நேரம் செலவிட்டுச் செதுக்கிப் பெறக்கூடிய அதே விளைவுகளை, நீங்கள் இலகுவாகச் செய்துகொள்வதற்கு சில மென்பொருட்கள் வழிவகுக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் 'XnSketch' எனும் இலவச மென்பொருள். இதன்மூலம் புகைப்படங்களுக்கு மிக இலகுவான முறையில் கார்ட்டூன்கள், ஓவியம் இன்னும் பல Effect களை சேர்த்துக்கொள்ள முடிகின்றது. சிறந்த இடைமுகத்துடன் ஒருமுறை Click செய்வதன்மூலம் புகைப் படங்களின் விளைவுகளை மாற்றக்கூடிய வகையில் இது அமைந்துள்ளது. எனவே, அனைவராலும் மிக இலகுவாகப் பயன்படுத்தக்கூடியதாக இந்த மென்பொருள் உள்ளது.

இதனைக் கணினியில் நிறுவவேண்டிய அவசியமில்லை என்பதுடன், இம்மென்பொருள் வெறும் 14MB அளவினையே கொண்டுள்ளது. இது தவிர, இதன்மூலம் பெறப்படும் விளைவுகளை (Outputs) Picasa, Tumblr, Imgur, Imageshack, YFrog, GlowFoto, TwitPic போன்ற தளங்களில் நேரடியாகப் பகிர்ந்துகொள்ளும் வசதியுமுண்டு. இதனை Windows XP, Windows 7, Windows 8 உட்பட Mac, Linux போன்ற இயங்குதளங்களிலும் பயன்படுத்த முடியும். XnSketch மென்பொருளை இலவசமாகத் தரவிறக்க http://www.snapfiles.com/get/xnsketch.html என்ற இணைப்பை நாடலாம்.









# Hard Disk இல் அழித்த கோப்புக்களை மீட்டெடுக்க 'R-Linux Recovery'



Hard Disk இல் தகவல்களைப் பதியும்போது, அவை குறிப்பிட்ட Sector களில் பதியப்படுகின்றன. நீங்கள் ஒரு கோப்பினை நிரந்தரமாக அழித்துவிட்டாலும் அவை அந்த குறிப்பிட்ட Sector களில் அழியாமலேதான் இருக்கும். அடுத்ததாக வேறு ஏதேனும் கோப்புக்கள் அந்த Sector களில் பதியப்படும்வரை அவை அதே இடத்தில்தான் இருக்கும்.

இவ்வாறு, அழித்த கோப்புக்கள் Sector களில் இருந்து முற்றிலும் அழிக்கப்படாமல் இருந்தால், அவற்றை மீட்டெடுக்க சில மென்பொருட்கள் உங்களுக்கு உதவிசெய்யும். அவற்றில் ஒன்றுதான் 'R-Linux Recovery' மென்பொருள்.இந்த மென்பொருள் Hard Disk இல் மட்டுமன்றி பென்ட்ரைவ் மற்றும் மெமரி கார்ட்களில் இருந்தும் செயல்படக்கூடியது. உங்கள் கோப்புக்கள் தெரியாமல் அழிந்துவிட்டாலோ, Format செய்துவிட்டாலோ அல்லது வைரஸ் வந்து அழித்துவிட்டாலோ இந்த மென்பொருளைக் கொண்டு கோப்புக்களை மீட்கலாம்.

அது மட்டுமன்றி, உங்கள் Hard Disk இனை ஒரு Image கோப்பாக சேமித்து வைக்கும் வசதியும் இதில் உண்டு. இதை வைத்தும் நீங்கள் பின்னாளில் உங்கள் கோப்புகளை மீட்டு எடுக்கலாம். இந்த இலவச மென்பொருளை http://download.cnet.com/R-Linux-Free-Recovery/3000-2248_4-10075543.html எனும் இணைப்புக்குச் சென்று தரவிறக்கிக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை இயங்குதளங்களோடு அறிமுகமாகும் 'Ativ Q'






கணினியில் ஒன்றுக்கு மேற்பட்ட இயங்குதளங்களை (Operating Systems) நிறுவிப் பயன்படுத்த வேண்டிய தேவை பலருக்கு இருந்து வருகின்றது. ஆயினும், துரதிர்ஷ்டவசமாக இன்றைய தொழில்நுட்ப உலகில் பிரபலமடைந்துவருகின்ற கைக்கணினிகளில் (tablets) ஒன்றுக்கு மேற்பட்ட இயங்குதளங்களை நிறுவ முடியாத நிலை இதுவரை காணப்பட்டு வந்தது. ஆனால், Samsung நிறுவனத்தின் புதிய வரவொன்று இந்தக் குறைபாட்டினைத் தீர்த்து வைக்கவுள்ளது.

அதற்கமைய, Windows 8 மற்றும் Android ஆகிய இயங்குதளங்களை ஒன்றிணைத்துப் பயன்படுத்தக்கூடிய கைக்கணினியை Samsung நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.



'Ativ Q' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கைக்கணினியின் வெளியீடு பற்றி லண்டனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது, Samsung நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

13.3 அங்குலத் திரையினைக் கொண்டுள்ள குறித்த கைக் கணினியானது, மடித்து வைக்கக்கூடிய விசைப் பலகையொன்றினையும் (Keyboard) கொண்டுள்ளது. intel தொழில்நுட்பத்துடன் குறித்த tablet கைக்கணினி வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், இதன் மின்கலம் 9 மணித்தியாலங்கள்வரை நீடிக்கக் கூடியது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், மேலும் பல வசதிகளையும் இந்த கைக்கணினி உள்ளடக்கியுள்ளதாக Samsung நிறுவனம் அறிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொபைல் ஃபோன்கள் அறிமுகமாகி 40 ஆண்டுகள்...!





பொறியாளர் மார்ட்டின் கூப்பரால் மொபைல் ஃபோன் அறிமுகப்படுத்தப்பட்டு 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. முதன்முதலில் அறிமுகமான மொபைல் ஃபோனில் பயன்படுத்தப்பட்ட பற்றரியின் எடை ஒரு கிலோ கிராம் ஆகும்.

மொபைல் ஃபோனை முதலில் மோட்டோரோலா நிறுவனம்தான் தயாரித்தது. இதன் பொறியாளர்கள் குழுவின் தலைவராக மார்ட்டின் கூப்பர் இருந்தார். அவர் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பத்திரிகையாளர் சந்திப்பில் குறித்த மொபைல் ஃபோனை அறிமுகம் செய்தார். இதன்படி, இந்த வருடம் ஏப்ரல் 3 ஆம் திகதியுடன் மொபைல் ஃபோன் அறிமுகமாகி 40 ஆண்டுகளாகிவிட்டன.

முதலாவது மொபைல் ஃபோனை அறிமுகம் செய்வதற்கான பத்திரிகையாளர் சந்திப்பிற்குச் செல்வதற்கு முன்பு மார்டின் கூப்பர், சிக்ஸ்த் அவென்யூவில் உள்ள அலுவலகத்தில் இருந்தபடி முதல் உத்தியோகபூர்வ அழைப்பை மேற்கொண்டு அதனைப் பரிசோதித்துக்கொண்டார். இதுதான் அங்கீகரிக்கப்பட்ட முதல் அழைப்பாகும். அப்போது மார்ட்டின் கூப்பர் பயன்படுத்தியது மோட்டோரோலா DynaTAC மொபைல் ஃபோனாகும். இதிலிருந்து பற்றரி 20 நிமிடங்களுக்கு மொபைல் ஃபோனுக்கு சக்தி அளித்தது. மார்டின் கூப்பர் முதல் முறையாக மேற்கொண்ட உத்தியோகபூர்வ அழைப்பு, பெல்லா லேப்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய தன்னுடைய போட்டியாளர் ஜோயல் ஏங்கெலுக்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.



# கணினி விளையாட்டுக்கென ஒரு விசேட மடிக்கணினி: Razer Blade



கணினி விளையாட்டுப் பிரியர்களுக்கென Razer நிறுவனம், 'Razer Blade' என அழைக்கப்படும் மடிக்கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது. இது விசேடமாக கணினி விளையாட்டுக்களுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

14 அங்குல HD திரையையும் 8 GB RAM ஐயும் இது கொண்டுள்ளது. 256GB அல்லது 512GB வரை அதிகரித்துக்கொள்ளமுடியுமான 128GB SSD Hard Disk ஐயும் NVIDIA GeForce GTX 765M graphics processor ஐயும் உள்ளடக்கியுள்ளது. இதன் பரிமாணமானது, 13.6 அங்குல அகலத்தையும் 0.66 அங்குல தடிப்பையும் 1.876kg நிறையையும் கொண்டுள்ளது. தற்போது சந்தையில் உள்ளவற்றில் மிக மெலிதானதும் அதிக ஆற்றல் கொண்டதானதுமாகக் கருதப்படும் Razer Blade மடிக்கணினியின் அறிமுக விலை 2,799 அமெரிக்க டொலர்கள் ஆகும்.






# கணினி விளையாட்டுச் சாதனங்களிடையே நடக்கவிருக்கும் பெரும்போட்டி!

# PS4 vs Xbox One

கணினி விளையாட்டுக்கள் மிகவும் பிரசித்தி பெற்றுவரும் இக்காலகட்டத்தில், பல நிறுவனங்களும் போட்டிபோட்டுக்கொண்டு கணினி விளையாட்டுக்களையும் கணினி விளையாட்டுக்கான சாதனங்களையும் உருவாக்கி வழங்கிவருகின்றன. அந்த வகையில், கணினி விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பிரபலமான விளையாட்டுச் சாதனங்களாக Microsoft நிறுவனத்தின் 'Xbox One' உம் Sony நிறுவனத்தின் 'PlayStation 4' உம் விளங்கிவருகின்றன.

இந்நிலையில், Xbox One மற்றும் PlayStation 4 (சுருக்கமாக PS4 எனப்படுகின்றது) ஆகிய பிரபலமான கணினி விளையாட்டுச் சாதனங்களை தயாரித்து விற்பனை செய்யும் Microsoft மற்றும் Sony ஆகிய நிறுவனங்கள், தமது புதிய தயாரிப்புகள் தொடர்பில் அடுத்தடுத்து அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன. அத்துடன், இரண்டு நிறுவனங்களும் தமது தயாரிப்புகளின் விற்பனை தொடர்பில் பெரும் வியாபாரப் போருக்கும் தயாராகி வருகின்றன.

கடந்த சில வாரங்களுக்குள் இரண்டு நிறுவனங்களுமே தமது புதிய விளையாட்டுச் சாதனங்கள் தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளன. இது, கணினி விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பையும் உருவாக்கியிருக்கின்றது. இதனால், இரண்டு நிறுவனங்களும் அறிமுகப்படுத்த இருக்கும் விளையாட்டுச் சாதனங்களுக்கிடையே இப்போதே, கடுமையான போட்டி ஏற்படவும் ஆரம்பித்துவிட்டது.



Microsoft நிறுவனம் தனது Xbox One தொடர்பில் அறிவித்தல் வெளியிட்டு சில தினங்கள் இடைவெளியிலேயே Sony நிறுவனமும் லொஸ்





ஏஞ்சல்ஸில் இடம்பெற்ற Electronic Entertainment Expo (E3) தொழில்நுட்பக் கண்காட்சியின்போது, தனது புதிய தயாரிப்பான PS4 பற்றிய அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

Sony நிறுவனத்தின் PS4 ஆனது, Microsoft இன் Xbox One இனை விடவும் குறைந்த விலையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. Xbox One இன் விலை 499 டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதற்கு நேரடியாகச் சவால் விடுக்கும் வகையில், PS4 இன் விலையானது 399




டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமது தயாரிப்புகள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களின் விளையாட்டுக்களை Xbox One இல் பாவிப்பதற்கு இணைய இணைப்பு அவசியம் எனவும் சில விளையாட்டுக்களுக்கு கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் Microsoft அறிவித்துள்ளது. இந்த அறிவித்தல் விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், குறித்த வகையான விளையாட்டுக்களை PS4 இல் இலவசமாக விளையாடமுடியும் எனவும் இது தொடர்பில் இணைய இணைப்பு அவசியம் இல்லை எனவும் Sony நிறுவனம் அதிரடியாக அறிவித்துள்ளது. இவ்விடயமானது, பலரிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இரண்டு விளையாட்டுச் சாதனங்களும் இவ்வருடத்தின் இறுதியில், அதாவது, நவம்பர் மாதமளவில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளியீட்டு திகதி தொடர்பில் Microsoft







உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளபோதிலும் Sony நிறுவனம் எதுவித அறிவித்தல்களையும் வெளியிடவில்லை. இதேவேளை, முன்னர் வெளியிடப்பட்டிருந்த Microsoft இன் Xbox 360 இனை விடவும் Sony இன் PS3 ஆனது அதிகளவில் விற்பனையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுவட்டத் தொடர்பாடல் மாதிரி




✱ தொடர்பாடல் மாதிரியானது, சுற்றுவட்ட செயன்முறையை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது.

✱ செய்தியை அனுப்புபவர், செய்தியை பெறுபவர் என்ற இரு பகுதிக்குமான இருவழித் தொடர்பாடல் முறைமையை உள்ளடக்கியுள்ளது.

✱ தகவல் அனுப்புபவரே, தகவலைப் பெறுபவராகவும் காணப்படுதல் முக்கிய அம்சமாகும்.

✱ தகவல் அனுப்புநரும், பெறுநரும் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடி தகவலளிப்பவருக்கும், பெறுநருக்கும் இடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுடன், தொடர்பாடுபவர், பெறுநர் நிலைகள் சுழற்சி முறையில் மாறி, மாறி இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

✱ ஆளிடைத் தொடர்பாடல் செயன்முறையில் இம்மாதிரி பின்பற்றப்படுகின்றது.

✱ இங்கு காட்டப்பட்டுள்ள வரிப்படம் செய்தியை அனுப்புபவர், குறித்த செய்தியை தகவலாக பெறுநருக்கு அனுப்பும்போது, பெறுநர் அச்செய்தியை உள்வாங்கி 'பரிபாடை விடுவிப்பு' செயன்முறை ஊடாக மீண்டும் செய்தியை அனுப்புகின்றார். இவ்வாறு சுழற்சித் தன்மையில் தொடர்ச்சியாக பின்னூட்டலைப் பெற்று செய்தியைப் பரிமாறிக் கொள்ளும் தொடர்புநிலைகள் உளவியல் ரீதியில் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றார்.

செய்தி

| அனுப்புநர் பெறுநர் | ⟷ | பெறுநர் அனுப்புநர் |
|---|---|---|

செய்தி பின்னூட்டல்

✱ செய்தியை அனுப்புபவர் பெறுநருக்கு ஏற்ற செய்தியை அனுப்புகின்றபொழுது, பெறுநர் செயற்படுநிலை நின்று துலங்கல் வெளிப்பாட்டைக்காட்டாத போது, அந்நிலையில் வினைத்திறனான தொடர்பாடல் செயன்முறை ஏற்பட வாய்ப்பில்லை என்பதை இம்மாதிரி விளக்குகின்றது.





✱ சுற்றுவட்டத் தொடர்பாடல் மாதிரியில் தொடர்பாடல் செயன்முறை என்பது மனப்பாங்கு, எண்ணக்கருக்கள், சிந்தனைகள், உணர்வுகளைப் புரிதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டமைகின்றன.

✱ தொடர்பாடல் மாதிரியில் தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய பண்புக்கூறான குறியீடு என்பது செய்தி என்னும் தகவல் மூலத்தில் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது. (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.








உருவங்கள் மற்றும் அவற்றுக்குரிய பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவற்றுடன் இணைக்க.




இந்தச் சிறுவன் நிறந்தீட்டிக்கொண்டிருக்கும் உருவத்தை புள்ளிகளை இணைப்பதனூடாக கண்டுபிடியுங்கள்.

பூரணப்படுத் தப்பட்டுள்ள ஓவியத்தைப் பார்த்து கீழுள்ள ஓவியத்தை முழுமைப் படுத்துங்கள்.



இந்தப் படத்தில் 14 பொருட்கள் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து அவற்றுக்குரிய பெயர்களைத் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන் ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் சுசிலா-ஆனந்தன் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**ආනන්දන්:** **ආයුබෝවන් සුසිලා! කොහේද යන්නේ?**
ஆயுபோவன் சுசிலா! கொஹேத யன்னே?
**ஆனந்தன்:** வணக்கம் சுசிலா! எங்கே போகிறீர்கள்?

**සුසිලා:** **ආයුබෝවන් ආනන්දන්! මම පන්ති යනවා.**
ஆயுபோவன் ஆனந்தன்! மம பந்தி யனவா.
**சுசிலா:** வணக்கம் ஆனந்தன்! நான் வகுப்புக்குப் போகிறேன்.

**ආනන්දන්:** **මොන පන්තියට ද යන්නේ?**
மொன பந்தியட்ட த யன்னே?
**ஆனந்தன்:** என்ன வகுப்புக்குப் போகிறீர்கள்?

**සුසිලා:** **මම ගණන් පන්තියට යනවා.**
மம கணன் பந்தியட்ட யனவா.
**சுசிலா:** நான் கணித வகுப்புக்குப் போகிறேன்.

**ආනන්දන්:** **පන්තිය කොහේද තියෙන්නේ?**
பந்திய கொஹேத தியென்னே?
**ஆனந்தன்:** வகுப்பு எங்கே இருக்கிறது?

**සුසිලා:** **සර්ගේ ගෙදර.**
சேர்கே கெதற.
**சுசிலா:** ஆசிரியரின் வீட்டில்.

**ආනන්දන්:** **ළමයි ගොඩක් එනවා ද?**
லமய் கொடக் எனவா த?
**ஆனந்தன்:** நிறையப் பிள்ளைகள் வருகின்றனவா?

**සුසිලා:** **නැහැ, අපි හතර දෙනයි ඉන්නේ.**
நெஹெ, அப்பி ஹதற தெனய் இன்னே.
**சுசிலா:** இல்லை, நாங்கள் நாலு பேர்தான் இருக்கிறோம்.

**ආනන්දන්:** **විභාගය කවදා ද සුසිලා?**
விபாகய கவதா த சுசிலா?
**ஆனந்தன்:** பரீட்சை எப்போது சுசிலா?

**සුසිලා:** **විභාගය ලබන මාසයේ.**
விபாகய லபன மாசயே.
**சுசிலா:** பரீட்சை எதிர்வரும் மாதத்தில்.

**ආනන්දන්:** **විභාගයට දැන් ලෑහැස්ති ද?**
விபாகயட்ட தென் லெஹெஸ்தி த?
**ஆனந்தன்:** பரீட்சைக்கு இப்போது ஆயத்தமா?

**සුසිලා:** **ඔව්, දැන් පාඩම් කරනවා.**
ஒவ், தென் பாடம் கறனவா.
**சுசிலா:** ஆம், இப்போது படிக்கிறேன்.

**ආනන්දන්:** **හොඳට පාඩම් කරන්න.**
ஹொந்தட்ட பாடம் கறன்ன.
**ஆனந்தன்:** நன்றாகப் படியுங்கள்.

**සුසිලා:** **හොඳයි ආනන්දන්, මම ගිහින් එන්නම්.**
ஹொந்தய் ஆனந்தன், மம கிஹின் என்னம்.
**சுசிலா:** நல்லது ஆனந்தன், நான் போய் வருகிறேன்.



### பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக.

1. මම ................ යනවා.
2. පන්තිය කොහේද ................?
3. ................ පාඩම් කරන්න.




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற உடன்பாடு நிலை வாக்கியங்களை, Did எனும் இறந்தகால துணை வினைச் சொல்லின் (Past Tense Auxiliary Verb) உதவியுடன், வினா நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே அவதானிப்போம்.

(அ) உனது சகோதரன் முகாமையாளருடன் கதைத்தான்.
Your brother spoke to the manager.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) உனது சகோதரன் முகாமையாளருடன் கதைத்தானா?
Did your brother speak to the manager?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Your brother spoke. (Affirmative)
உனது சகோதரன் கதைத்தான். (உடன்பாடு)

* Did your brother speak? (Interrogative)
உனது சகோதரன் கதைத்தானா? (வினா)

(இ) உனது சகோதரி ஆங்கிலம் படித்தாள்.
Your sister studied English.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) உனது சகோதரி ஆங்கிலம் படித்தாளா?
Did your sister study English?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Your sister studied. (Affirmative)
உனது சகோதரி படித்தாள். (உடன்பாடு)

* Did your sister study? (Interrogative)
உனது சகோதரி படித்தாளா? (வினா)

(உ) உனது தந்தை ஒரு கடிதம் எழுதினார்.
Your father wrote a letter.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) உனது தந்தை ஒரு கடிதம் எழுதினாரா?
Did your father write a letter?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Your father wrote. (Affirmative)
உனது தந்தை எழுதினார். (உடன்பாடு)

* Did your father write? (Interrogative)
உனது தந்தை எழுதினாரா? (வினா)

(எ) உனது தாய் உனக்கு ஆங்கிலம் கற்பித்தார்.
Your mother taught you English.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)


(ஏ) உனது தாய் உனக்கு ஆங்கிலம் கற்பித்தாரா?
Did your mother teach you English?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Your mother taught. (Affirmative)
உனது தாய் கற்பித்தார். (உடன்பாடு)

* Did your mother teach? (Interrogative)
உனது தாய் கற்பித்தாரா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மூலகங்களின் நிறத்தை அறிவீர்களா?

| மூலகம் | நிறம் |
|---|---|
| ஐதரசன் | நிறமற்றது |
| ஹீலியம் | நிறமற்றது |
| லித்தியம் | வெள்ளி நிறம் |
| பெரிலியம் | வெள்ளிப் பளிங்கு |
| போரன் | கருமை நிறத்தாள் |
| காபன் | கறுப்பு நிறத் திண்மம் |
| நைதரசன் | நிறமற்றது |
| ஒட்சிசன் | நிறமற்றது |
| ஃப்ளோரின் | மஞ்சள் |
| நியோன் | நிறமற்றது |
| சோடியம் | வெள்ளி போன்ற மினுக்கம் |
| மெக்னீசியம் | வெள்ளி மினுக்கம் |
| அலுமினியம் | நீல நிறம் சார்ந்த வெள்ளி மினுக்கம் |
| கந்தகம் | மஞ்சள் |
| க்ளோரின் | இளம் பச்சை |
| கல்சியம் | வெள்ளை போன்ற வெண்ணிறம் |

எப்.அஃப்லா, அந்நூர் மத்திய கல்., பானகமுவ.

# மோசக்காரக் கொக்கு






ஒரு காட்டில் குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தில் கொக்கு ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குளத்திலுள்ள மீன்களை அந்த கொக்குப் பிடித்து சாப்பிட்டு வந்தது. இதனால், அது மிகவும் சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்ந்தது. சில காலங்களில் அந்த கொக்குக்கு வயதாகிவிட்டது. இதனால், அதற்கு மீன்களை வேட்டையாட முடியாமல் போனது.

ஒருநாள் அந்தக் கொக்கு மிகவும் கவலையுடன் ஒரு கல்லின் மீது உட்கார்ந்திருந்தது. அந்த வழியாக வந்த ஒரு நண்டு கொக்கைப் பார்த்து "ஏன் கவலையுடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்கு கொக்கு, 'இந்த வழியாக மீன்பிடிப்பவர்கள் இரண்டுபேர் சென்றார்கள். அப்போது அவர்கள், "இந்தக் குளத்தில் அதிகமான மீன்கள் இருக்கின்றன. பின்னர் ஒருநாள் அவற்றைப் பிடித்துச் செல்வோம் என்று பேசிக்கொண்டார்கள்" என்று கொக்கு கவலையுடன் கூறியது. உடனே, அந்த நண்டு குளத்திற்குள் சென்று நடந்த விடயத்தை மீன்களிடம் சொன்னது. இதனால், அனைத்து மீன்களும் பயந்துவிட்டன.

இப்போது என்ன செய்வதென்று தெரியாமல் கடைசியாக கொக்கிடமே சென்று ஆலோசனை கேட்போம் என்ற முடிவுக்கு வந்தன. எதிரியாக இருந்தாலும் ஆலோசனை கேட்பது சிறந்தது என்ற கருத்திற்கேற்ப, அனைத்து மீன்களும் கொக்கிடமே சென்று ஆலோசனை கேட்டன.

அதற்கு கொக்கு "எனக்குத் தெரிந்த குளமொன்று மலைக்கருகில் உள்ளது. அங்கு சென்றால் பாதுகாப்பாக நீங்கள் இருக்கலாம்" என்று கூறியது. அதை நம்பிய மீன்களும் அதற்கு சம்மதித்தன. கொக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மீனாக பிடித்துச் சென்று அருகிலிருந்த மலையில் வைத்து சாப்பிட ஆரம்பித்தது.

ஒருநாள் நண்டு, கொக்கிடம் வந்து தன்னையும் கூட்டிச் செல்லுமாறு வேண்டிக்கொண்டது. நண்டையும் எப்படியாவது சாப்பிட வேண்டும் என்று நினைத்த கொக்கு நண்டையும் தூக்கிச் சென்றது. மலைக்கு அருகில் சென்றபோது, அங்கு மீன் முட்கள் கிடப்பதை நண்டு கண்ணுற்றது. நடந்ததை விளங்கிக்கொண்ட நண்டு தன்னுடைய இரண்டு கால்களாலும் கொக்கின் கழுத்தைநெரித்தது. இதனால், அது மூச்சுத் திணறி பரிதாபகரமாக உயிரிழந்தது.

எம்.ரி.எம்.இர்ஷாத்,
அந்-நஹ்ஜதுல் இஸ்லாமிய்யா அ.க.,
வாழைச்சேனை-05

## தாய்மை



வாய் இல்லாவிடின்,
வார்த்தை இல்லை
நீ இல்லாவிடின்,
நானில்லை அம்மா!
தாய் போல அரவணைக்க
தரணியிலே யாருண்டு?
தாய்போல அன்பு காட்ட
உலகினிலே யாருண்டு?
தாய் போலப் பாதுகாக்க
பூமியிலே யாருண்டு?
அம்மா நீயும் நானும்
ஏழேழு ஜென்மத்திலும்
பிரியாமல்
உன் அன்புக் கடலில்
தினமும் நான் மிதக்க
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

ச.நிஷாளினி,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## சின்சில்லா



அந்தீஸ் மலைத் தொடரிலுள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் பாலூட்டி மிருகமான சின்சில்லா வாழ்ந்து வருகின்றது. இவை மனிதனுடன் சிநேகபூர்வமாகப் பழகக்கூடியவை. அணிலைப் போன்ற தோற்றத்தைக்கொண்ட இவை தாவர உண்ணிகளாகும். சின்சில்லாக்கள் பெரிய கண்களையும் வட்டமான காதுகளையும் சாம்பல் நிறம் கலந்த தோலையும் கொண்டுள்ளன. இவை 25-30 சென்றிமீற்றர் நீளமும் 0.8 கிலோகிராம் எடையையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

க.ஜீவகரன்,
யா/தாவடி இ.த.க.பாட.,
தாவடி தெற்கு, கொக்குவில்.

# பிரமிள் என்ற மேதை



தமிழ் இலக்கிய உலகம் புதுமைப்பித்தனுக்குப் பின்னர் புகழ்ந்து கொண்டாட வேண்டிய ஒரு மாபெரும் இலக்கிய மேதை தான் பிரமிள். பாரதி, புதுமைப் பித்தனுக்குப் பின்னர் தோன்றிய ஓர் இலக்கிய மேதை, தமிழின் முதன்மையான கவிஞர், விமர்சகர், சிறுகதையாசிரியர், புதுக்கவிதை முன்னோடிகளுள் முக்கியமான ஒருவர் எனும் சிறப்புக்களைப் பெற்ற இவர், இலங்கை வேலணையில் பிறந்து, திருகோணமலையில் வாழ்ந்து, பின்னர் உயர்கல்வி கற்பதற்காகத் தமிழகம் சென்றார். தமிழகத்து இலக்கிய உலகில் சிம்மமாகத் திகழ்ந்து பிரமிள் என புனைபெயர் கொண்டு அழைக்கப்பட்ட இவரே, அனைவரும் அறிந்த தர்முசிவராமு ஆவார். இவர் இலங்கையில் பிறந்து தமிழகத்தில் வாழ்ந்த இலக்கியப் படைப்பாளி. ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்ட இவர், பானுசந்திரன், அரூப் சிவராம், பிரமிள் போன்ற புனைபெயர்களில் எழுத்துத்துறையில் மிளிர்ந்துள்ளார். பிரமிள் பற்றிய ஒரு குறுந்திரைப்படமும் ஒளிபரப்பப்பட்டுள்ளது. பிரமிள் என்று தமிழ் இலக்கிய உலகம் அறிந்த இந்த மேதை, தமது 56 ஆவது வயதில் 1997 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் திகதி அமரரானார்.

ஸஹ்ரா ஜாபிர், பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்சி மாறியதால், கோரிக்கையும் மாறியது

சேர். அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் அவர்கள் அடிமைச் சேவக முறையை இல்லாது ஒழிக்கும் ஆலோசனையை முன்வைத்தார். அத்துடன், சரியானதொரு தீர்ப்பு இல்லாமல் எவரையும் சிறையிலிடும் வழக்கத்தையும் இல்லாதொழிக்க வேண்டும் என கூறினார்.

இந்த யோசனையை இலங்கை மந்திராலோசனை சபைக்கு முன் வைத்தார். மந்திராலோசனை சபை அக்கோரிக்கையை குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு முன்வைக்கத் தீர்மானித்தது. அதற்காக, ஜோன்ஸ்டன் அவர்கள் இங்கிலாந்திற்கு செல்லவேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது.

குடியேற்ற நாட்டுச் செயலாளர் இந்த ஆலோசனை மிகவும் சிறந்தது என ஏற்றுக்கொண்டார். இவ்வேளை, எவரும் எதிர்பார்க்காத வகையில், அன்றைய அரசாங்கம் மாறியதால், புதிய ஆட்சி பதவிக்கு வந்தது. மேலும், குடியேற்ற நாட்டுச் செயலாளர் பதவியும் மாற்றம் கண்டது. எனினும், புதிய குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் மீண்டும் இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அவரோ, இந்த ஆலோசனைகளில் பலவற்றிற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். இதில் சிலவற்றை மாத்திரமே ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை, கி.பி.1811 ஆம் ஆண்டு ஜோன்ஸ்டன் அவர்கள் இலங்கைக்குத் வந்திருந்தார். இதனால், அடிமைச் சேவகம் நிறுத்தப்பட்டது. ஜூரி சபையின் முன் வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரமும் கிடைத்தது. கறுவா விற்பனை தொடர்பான தனியார் உரிமையை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரமும் இலங்கையில் காணிகளை ஐரோப்பியர்கள் பணம் கொடுத்து வாங்குவதற்கு இருந்த தடைச்சட்டமும் நீக்கப்பட்டது.

அத்துடன், சேர்.அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் அவர்களால் கி.பி. 1810 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வெளியீட்டுப் பத்திரத்தின் கொடுப்பனவுகளுக்கு ஆளுனர் மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அவரது ஆலோசனைப்படி தலைமை நீதிச்சபை இரு பிரிவுகளாகப் பிரிந்தன. அதன்பின், அனைத்து சட்ட அதிகாரிகளின் அதிகாரங்களும் தலைமை நீதிபதியின் அதிகாரத்தின்கீழ் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.07.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 424**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## 5 பிழை திருத்தி எழுதுக

1. பன்நீர் - ....................
2. தீகுழிப்பு - ....................
3. நாட்ரு - ....................
4. பூன்சோளை - ....................

## 1 வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## 2 உருக்களைக் கூட்டி, வரும் விடையில் வட்டமிடுக





## 4 சரியான எதிர்ப்பாற் சொல்லின்கீழ் கீறிடுக

1. குருடன் - குருடள்/குருடி/குருடை
2. தமையன் - தமக்கை/தமைக்கை/தமையள்
3. பெருமாட்டி - பெருமாளன்/பெருமான்/பெருமாட்டன்
4. நாயகன் - நாயகை/நாயி/நாயகி
5. அம்மா - அப்பு/அப்பா/அம்மப்பா

## 3 வட்டம், முக்கோணம், சதுரம் என்பனவற்றின் எண்ணிக்கையுடன் இணைக்க




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 40




### மேலிருந்து கீழ்

01. தேய்பிறையின் கடைசி நாள்.
02. வழிப்போக்கர்கள், பயணிகள் இளைப்பாறிச் செல்வதற்காக அமைக்கப்படும் இடம்.
03. பறவையினமொன்று.
04. கோவிலில் உண்டு.
06. கடலை நோக்கிப் பாய்ந்தோடும்.
07. 'வேக வைத்தல்' என்றும் அர்த்தப்படும்.
08. வேகமாக ஓடக்கூடிய ஒரு விலங்கினம்.

### இடமிருந்து வலம்


01. பயம்.
04. கல் இடுக்குகளில் வாழும்.
05. ஆசான்.
07. வில்லில் வைத்து எய்யப்படுவது.
09. குரங்கு.
10. நாள் அல்லது வார அடிப்படையில் வழங்கப்படும் பணம். (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.39 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | ந் | 2 தா | 3 ம | ரை | |
| வீ | | 4 க | ரை | | 5 க |
| லீ | | ம் | | 6 ப | தி |
| | 7 பு | | 8 ஆ | | ரை |
| டி | ர | 9 க | | 10 பா | |
| 11 ஆ | வீ | | 12 ப | சி | |

## அறிவுக்கு விருந்து - 421 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**




**போட்டி: 02**




**போட்டி: 04**

1. நீலவானம்
2. பரப்பளவு
3. சந்தனம்
4. கருவிழி
5. அன்னதானம்

**போட்டி: 05**

1. அறிவீன இடத்தில் புத்தி கேளாதே!
2. தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.
3. பெருமையும் சிறுமையும் வாயால் வரும்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 421 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
*ச.டினோஸ்காந், மட்டக்களப்பு.*

**போட்டி: 02**
*ஜ.மஸ்னா, கொடமுதுனை.*

**போட்டி: 03**
*பி.காருணிகா, கண்டி.*

**போட்டி: 04**
*எம்.ஹஸ்மில், மதுரங்குளி.*

**போட்டி: 05**
*ச.ராகிஷா, இரத்தினபுரி.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- க.ஜீவாகரன், கொக்குவில்.
- எஃப்.சாஜிதா, மாத்தளை.
- பி.சரிகா, ஆரையம்பதி.
- கு.அருணோதயன், அரியாலை.
- எஃப்.ஸும்லா, அக்கரைப்பற்று-04.
- வை.ஆதர்ஷன், நாவற்சோலை.
- அமீருல் ஹக், பாணந்துறை.
- எஃப்.டில்சிகா, கிண்ணியா.
- கே.டாணியா, மாத்தளை.
- க.சிவரூபன், நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநாகல்-தல்கஸ்பிடியைச் சேர்ந்த நப்லான்-ஹுஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹமட் நிஸாப், தனது மூன்றாவது பிறந்தநாளை 05.07.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



விவேகானந்தா மேடு கொழும்பு-13 ஐச் சேர்ந்த கணேசன்-காணசரஸ்வதி தம்பதியரின் செல்வப் புதல்வன் டிலுக்ஷன், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 26.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.








தேசத்துக்கு மகுடம் கண்காட்சி ஊடாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இளைஞர் சேவை அதிகாரி யு.முபாறக் அலி தலைமையில் கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான யு.உமர்லெப்பை, லங்கா சகரிஹா தமயந்தி, கல்முனை பிரதேச செயலக பிரதம எழுதுவினைஞர் ஆ.ஜஃபர், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆ.பஸ்லூன், ஆ.முஜீப் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

*(தகவல்: மருதமுனை றாசீக் நபாயிஸ்)*




அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



லோ.தினேஸ்குமார்,
தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்., தொண்டமானாறு.



எஃப்.சம்ஹா,
தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாட.,
திஹாரிய.



எஃப்.ஸாபிகா,
பாதுபியா மு.ம.வித்., ஹெம்மாதகம.



நஸ்னா நியாழ்டீன்,
அழுத்கம் வீதிய மு.பெ.தே.கல்.,
தர்கா நகர்.



செ.ஆன்திருஷா,
பரிகாரிகண்டல், முருங்கன்.


# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

வின்சென்ட் வான் கோ (Vincent van Gogh), *1853* ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி நெதர்லாந்தின் சுன்டேரட் நகரில் பிறந்தார். இவர், உணர்வுப்பதிவு வாத ஓவியர் (Post-Impressionist) ஆகக் எனக் கருதப்படுகின்றார். 20 ஆம் நூற்றாண்டு ஓவியத் துறைக்கு இவரது ஓவியங்கள் பெரும் உந்துசக்தியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. மனதைக் கொள்ளைகொள்ளும் அழகு, அடர்ந்த நிறம், உணர்வுசார் தன்மை என்பன இவரது ஓவியங்களில் காணப்பட்ட சிறப்பம்சங்களாகும்.

ஆரம்பகாலத்தில் கலைப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்திலேயே, இவர் பணிபுரிந்தார். பின்னர், பெல்ஜியம் நாட்டின் சுரங்கப் பிராந்தியமொன்றில் மதபோதகராக சில காலம் கடமையாற்றினார். அங்கு இருக்கும் போது, ஓய்வு நேரங்களில் ஓவியங்களை வரையும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்கமைய, *1885* இல் இவர் தனது முதலாவது ஓவியமான 'கிழங்கு உண்பவர்கள்' (The Potato Eaters) என்ற ஓவியத்தை வரைந்தார்.ஏனைய ஓவியர்களைப் போன்றல்லாது, வான் கோ தனது வாழ்நாட்களின் பிற்பகுதியிலேயே ஓவியங்களை வரையத் தொடங்கினார். எவ்வாறாயினும், அவர் இறப்பதற்கு இரண்டு வருடங்கள் இருக்கும் நிலையில், 2,100 இற்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்திருந்தார்.

விண்மீன்கள் நிறைந்த இரவு, சூரியகாந்தி மலர்கள், துக்கம், 'Bedroom in Arles', இரவு நேரத்தில் வெள்ளை மாளிகை, வான் கோவின் சுய உருவப்படங்கள், பழைய ஆலை, சைப்ரஸ் மரங்கள் குறித்த ஓவியங்கள், மலர்கள் உட்பட, மேலும் பல ஓவியங்களை அவர் வரைந்துள்ளார். *1890* களில் சில நாட்கள் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அதே ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி, தமது 37 ஆவது வயதில் பிரான்ஸில் உயிர் நீத்தார். எவ்வாறாயினும், வான் கோ உயிர் வாழ்ந்த காலத்தில் அவரின் கலையை யாரும் மதிக்கவில்லை.எனினும்,இன்றோ நவீன ஓவியத்தின் செல்வாக்கு வாய்ந்தவராக அவர் கருதப்படுகின்றார்.

பழைய ஆலை (The Old Mill)





கிழங்கு உண்பவர்கள்



**வின்சென்ட் வான் கோ (1853-1890)**



சேம் ஸ்டேன்லி,
கேம்பிரிட்ஜ் கல்., கொட்டகலை.



பி.கிரிஜா,
பரிசுத்த திருத்துவ ம.கல்., நுவரெலியா.



க.கஜானா,
யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



ரேச்சல் ஸ்டேன்ஸி,
சரஸ்வதி த.ம.வித்., லிந்துல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர்மேனுக்கு 75 வயதாகின்றது...!!




# இரைச்சல் அற்ற கொன்கோர்ட் விமானம்!

அமெரிக்காவின் நாஸா நிறுவனம் தற்போது 'கொன்கோர்ட்' விமானத்தின் சாயலில் ஒலியின் வேகத்தினை விஞ்சும் சுப்பர் சோனிக் விமானம் ஒன்றை பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபடுத்தி வருகின்றது. அமெரிக்காவின் பிரபல போயிங் நிறுவனமே இந்த விமானத்தினை திட்டமிட்டு வடிவமைத்துள்ளது. 2003 நொவெம்பரில் கொன்கோர்ட் விமானமானது தனது பயண செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டதன் குறையைப் போக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.வணிக ரீதியில் சுப்பர்சோனிக் விமானங்கள் ஆகாயத்தில் பறப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. வானில் பறக்கும்போது, இவை வெளிப்படுத்தும் பேரிரைச்சலே இதற்குக் காரணமாகும்.

அமெரிக்காவின் ஒஹியோ பிராந்தியத்தில் உள்ள நாஸா நிறுவனத்தினைச் சேர்ந்த க்ளென் ஆய்வகத்தில் இந்த விமானம் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த





புதிய சுப்பர்சோனிக் ஜெட் விமானம் பறக்கும்போது, வெளியாகும் பேரிரைச்சல் தரும் ஒலியினைக் குறைக்க முடியுமா என்பது குறித்து ஆராய்வதே இந்த பரிசோதனைகளின் முக்கிய நோக்கமாகும்.

இந்த விமானம் குறித்து போயிங் நிறுவனம் தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. இந்த சிறிய சுப்பர்சோனிக் மாதிரி வடிவத்தின் மேற்பகுதியில் உள்ள துளை செயற்படும் விதம் குறித்து ஆய்வாளர்கள் இங்கு ஆய்வுசெய்து வருகிறார்கள். மிக வேகமாக வானைக் கிழித்துக்கொண்டு செல்லும்போது, அதிலிருந்து வெளிவரும் வளியின் அளவு, ஜெட் விமானத்தின் செயற்பாடு, வளி விடுவிப்பு என்பன ஒலிக்கு எந்தளவில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.


துளையில் இருந்து வெளிவரும் வளியின் அளவினை தொலைக்கட்டுப்பாட்டு (Remote Control) கருவியினூடாக கட்டுப்படுத்துவதே இந்த ஆய்வாளர்களின் ஆய்வுநிலை நோக்கமாகும். விமானத்தின் தென்பகுதியில் விமான ஓட்டியின் பக்கம் உள்ள துளையின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு உபகரணத்தினை தொலைநோக்கியினூடாகக் கட்டுப்படுத்துவதனூடாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நாஸா நிறுவனத்தின் விண்வெளி விஞ்ஞான ஆய்வுத்திட்ட அதிகார சபையில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் விமானப் பயணங்கள் தொடர்பான பரீட்சார்த்த முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒலி மாசடைவு இன்றி, சுற்றாடல் சார்பு கொண்ட சுப்பர்சோனிக் விமானத்தினை எதிர்காலத்தில் வானில் செலுத்துவதே இந்த பிரிவின் முக்கிய குறிக்கோளாகும். பசுமை விமானச் சேவையினை உலகம் முழுவதும் ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆலோசனை வழங்குவது இந்த அதிகாரசபையின் ஒரு நடவடிக்கையாகும். எரிபொருட்கள் பாவனை மற்றும் பாதிப்பினை ஏற்படுத்தும் வளி வெளியேற்றம் என்பனவற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படவேண்டிய மாற்று நடவடிக்கைகளை ஆராய்வதே, இந்த செயற்பாட்டின் அடிப்படைத் திட்டமாகும். இதேபோன்றதொரு இன்னுமொரு ஆய்வு வர்ஜினியா பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள நாஸா நிறுவனத்தின் லேன்லி ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.



விமானத்தின் உண்மையான அளவின் நூற்றுக்கு 1.79 வீதமாக உள்ள இந்த சிறிய வடிவ மாதிரி.




நாஸா நிறுவனத்தின் க்ளீவ்லண்ட் க்லென் ஆய்வகத்தினுள் உள்ள சுப்பர்சோனிக் காற்று சுரங்கத்தினுள் புதிய விமானத்தின் சிறிய வடிவ மாதிரியினை சோதனைக்குட்படுத்துவதையே இங்குள்ள படம் காட்டுகின்றது.

எஃப்-100 ரக ஜெட் தொகுதி கொண்ட சுப்பர்சோனிக் தொழில்நுட்பம் கொண்ட புதிய விமானங்களின் மாதிரி, துல்லியமான வேகத்தில் வளியினை வெளியேற்றும் முறை, பலதரப்பட்ட வடிவம் கொண்ட விமானங்கள் என்பன இங்கு பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத குறைவான ஒலி அலைகளை வெளியேற்றும் தொகுதியினை இனங்காண்பதே இங்கு நடைபெறுகின்றது. இந்த ஆய்வுகள் வெற்றி அளிப்பின் கொன்கோர்ட் விமான அறிமுகத்தின் பின்னர் விமான சேவைகளுக்காக மீண்டும் சுப்பர்சோனிக் பயணிகள் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மாகாண கொடிகள்


இலங்கையின் நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்தும் முகமாக, மேலைத்தேயம் கீழைத்தேயம் என்று வகுக்கப்பட்டபோதிலும் இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பினை இணைத்து நிர்வாகத்தின் இலகுத் தன்மைக்காக 9 மாகாணங்களாக வகுக்கப் பட்டன. தற்போது மாகாண சபைகளாக உள்ள மாகாணங்களின் நிரந்தர மாகாண கொடிகள் வருமாறு...



வட மாகாண கொடி



வட மத்திய மாகாண கொடி



மேல் மாகாண கொடி




ஊவா மாகாண கொடி




வடமேல் மாகாண கொடி



கிழக்கு மாகாண கொடி



சப்ரகமுவ மாகாண கொடி



தென் மாகாண கொடி




மத்திய மாகாண கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1924



2 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1924
டென்மார்க்

5,000 சாரணர்கள் | JAMBOREE | எர்மெலுண்டென்

34 நாடுகள் | DANMARK 1924 | கொபன்ஹேகன்

விஜய் சாரணர் உலகம்



டென்மார்க் நாட்டின் கொபன்ஹேகன் மாநகரில் உள்ள எர்மெலுண்டென் என்ற இடத்தில் 1924 ஆம் ஆண்டு இரண்டாம் உலக ஜம்போரி நடைபெற்றது. இந்த ஜம்போரி முடிந்து ஒரு வார காலம்வரை உள்ளூர் மக்களின் விருந்தினர்களாக இருந்து சாரணர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இந்த இரண்டாம் உலக ஜம்போரியில் சுமார் 5,000 சாரணர்கள் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட சாரணர்களுக்குப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றோருக்கு கொபன்ஹேகனில் இருந்த அரங்கில் BP பரிசுகள் வழங்கப் பட்டன என்பதும் BP க்கு 'Bathing Master' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

ஜம்போரியின் சின்னமாக 'Danish' கொடி இருந்தது. ஒருநாள் மாலை ஒவ்வொரு நாட்டுச் சாரணர்களுள் ஒருவரை அழைத்து ''நான் தினந்தோறும் நற்செயல் செய்யும் நம்பிக்கை உள்ளவன்' என்று அவரவர் நாட்டு மொழியில் சொல்ல அனைவரும் இதைத் திருப்பிச் சொன்னார்கள். இவ்வாறு 32 மொழிகளில் சொல்லப்பட்டன. ஓர் அமெரிக்க இளைஞர் வழிநடத்திச் செல்ல பின்தொடர்ந்து சென்ற சாரணர்கள் "Bp.., BP., Baden-Powell; Baden-Powell; Chief, Chief, Chief, Rah! Rah! Rah!" என முழக்கமிட்டுச் சென்றனர். இந்நிகழ்வுகளைப் பார்வையிட ஏராளமான பார்வையாளர்கள் வந்துசென்றமை ஒரு பெருமைப்படக்கூடிய விடயமாக இருந்தது.

தொகுப்பு: ஜனாதிபதி சாரணர்
**யோ.கேதீசன்** SLTS BP.A.WB (SL) IAP (India)

## நீளமான கயிறுகளை இவ்வாறு பேணுங்கள்





நீளம் கூடிய கயிறுகள், நூல்கள், வயர்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்ற சாரணர்களில் சிலர் தமது தேவை முடிந்ததும், மேற்படி நீளமான கயிறு, நூல், வயர் போன்றவற்றை அப்படியே சுற்றி ஒரு குவியலாகப் போட்டுவிடுவர். இதனால், இவை சிக்கல் நிறைந்த முடிச்சுக் குவியலாக மாறிவிடுகின்றன. இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இவற்றைப் பயன்படுத்துவதற்கு சிக்கல்களை அவிழ்ப்பதே பெரும் சிரமமாக அமைந்துவிடும். அதுமட்டுமன்றி, அவற்றின் பாவனைத் தரமும் குன்றிவிடும்.

ஆனால், நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட அனுபவம் மிக்க சாரணர்கள் இவற்றை சீரான ஓர் ஒழுக்கு முறையில் கையாண்டு களஞ்சியப்படுத்தி வைப்பர். எனவே, நீளமான கயிறுகளை சீரான ஒழுங்கு முறையில் எவ்வாறு பேணிப் பாதுகாக்கவேண்டும் எனும் படிமுறை இங்குள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.

**இலங்கை சாரணர் சங்கத்தின் காங்கேசன்துறை மாவட்ட புதிய மாவட்ட ஆணையாளர் செ.சற்குணராஜா பதவி ஏற்பு விழாவும் முன்னாள் மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரனுக்கான பாராட்டு விழாவும் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. பிரதம விருந்தினராக உயர்கல்விப் பணிப்பாளர் உயர்திரு செ.சந்திரராஜா மற்றும் வலிகாமம் வலயத்தின் கல்வி அதிகாரிகளும் மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.**



வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா குத்துவிளக்கேற்றுகிறார்.



புதிய மாவட்ட ஆணையாளர் செ.சற்குணராஜா (இடது) வாழ்த்துப் பாமாலை பெறுகின்றார்.



முன்னாள் மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரன் புதிய ஆணையாளரை வாழ்த்துகின்றார்.




புதிய மாவட்ட ஆணையாளர் செ.சற்குணராஜா (இடது) முன்னாள் மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரன் ஆகியோர் வாழ்த்துப்பாமாலையுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேற்றில் விளையாடல்...

உலகில் பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான நிகழ்வுகள், போட்டிகள் நடைபெறுவதுண்டு. இவற்றில் சில மிகவும் விநோதமானவையாகவும் அமைவதுண்டு. இவ்வாறுதான் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இங்கிலாந்தின் மெல்டொன் என்ற இடத்தில் இவ்வாறு விநோதமான ஒரு போட்டி நடைபெற்றுள்ளது. வருடாந்தம் நடைபெறுகின்ற இந்தப் போட்டிக்கு 'மெல்டோன் சேற்றுப் போட்டி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் இம்முறை கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்தது. துர்நாற்றம் மிக்க கறுப்பு நிறத்திலான சேற்றைக் (சகதி) கொண்ட அழுக்கான 'ப்ளக்வோட்டர்' எனப்படும் ஆற்றங்கரையிலேயே இந்தப் போட்டி நடைபெறுகின்றது. ஆனால், இதில் போட்டியிடுகின்றவர்கள் எந்தவொரு அதிருப்தியும் காட்டாமல் மிகவும் விருப்பத்துடன் விநோதமாக இந்த சேற்றில் இறங்கித் துள்ளிக் குதித்து தமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்வதுடன், வார இறுதி விடுமுறை நாட்களையும் இனிதே கழிக்கின்றனர்.



# சூரியப் புயலினால் பூமிக்கு ஆபத்தா?

அண்மையில் பாரிய சூரியப் புயல் ஏற்பட்டமை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் கருத்தின்படி, இந்த வருடத்தில் ஏற்பட்ட பாரிய சூரியப் புயல் இதுவென்று கூறப்படுகின்றது. இவ்வாறு சூரியப் புயல் ஏற்படுவதனால், பூமிக்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. ஆய்வுகளின்படி நேரடியாக புவிக்குத் தாக்கம் இல்லாதபோதிலும் சில சந்தர்ப்பங்களில் செய்மதி தொழில்நுட்பம் மற்றும் GPS தொழில்நுட்பம் ஆகியனவற்றில் தற்காலிக தாக்கத்தை இவை ஏற்படுத்தக்கூடும். 1859 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூரியப் புயலினால் தொலைமடல் சேவைகள் பல நாட்களாக செயலிழந்து போயிருந்தன. அதேபோன்று 1989 ஆம் ஆண்டில் கெனடாவின் கியூபெக் நகரில் மின்சார விநியோகம் ஒன்பது நாட்கள் செயலிழந்து போயிருந்தது.

# வெடித்துச் சிதறிய 'மயோன்' எரிமலை



பிலிப்பைன்ஸ் நாட்டின் மயோன் எரிமலையானது, அடிக்கடி குமுறும் ஓர் எரிமலையாகும். அதன்படி, கடந்த மூன்று வருடங்களின் பின்னர் சில தினங்களுக்கு முன்னர் இந்த எரிமலை வெடித்துள்ளது. மலை ஏறுபவர்கள் பொதுவாக இந்த மயோன் எரிமலையில் ஏறுவதற்கு மிகவும் ஆர்வம் கொள்வதுண்டு. அதன்படியே, இந்த எரிமலையானது, வெடிக்கும்போதும் சிலர் மயோன் எரிமலையில் ஏறிக் கொண்டிருந்துள்ளனர். இவர்களில் நான்குபேர் அதே இடத்தில் மரணமடைந்துள்ளதுடன், இன்னும் சிலர் முகட்டின் குறித்த ஓர் இடத்தில் சிக்குண்டு இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இவர்களை மீட்பதற்காக உயிர்மீட்புப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மயோன் எரிமலை அமையப்பெற்றுள்ள எல்பே பிராந்தியத்தின் ஆளுநர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூலை மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 03, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org